# போலீஸ் பார்வை

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

POLICE PARVAI

• மலர்-10 • Volume-10 • இதழ்-3 • Issue-3 • ஜனவரி-2025 • January -2025 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV

E_Book: www.policeparvai.com





## வேகமாக பரவும் மெடாநியூமோ வைரஸ்!



## போதை பழக்கங்களுக்கு எதிராக 27,315 விழிப்புணர்வு கூட்டங்கள்

IG G.கார்த்திகேயன் IPS தகவல்




## பாரதியாக இருப்பதைவிட செல்லம்மாளாக இருப்பது..

1951-ல் திருச்சி வானொலியில் திருமதி.செல்லம்மாள் பாரதி உரை



## பாலியல் வன்கொடுமை; கேள்விக்குறியாகும் பெண் பாதுகாப்பு?






## கொடைக்கானலில் மெத்த பெட்டமைன் கடத்திய 4 ஐடி ஊழியர் கைது

புற்றுநோய் தோற்கடிக்கப்பட்டது; அன்னாசி சூடான தண்ணீர்

இயற்கை வாழ்வியலும் உடல் நலமும்


www.policeparvainews.com இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...



ஆண்டு தொடக்கமே அட்டகாச பலன் பெறும் 5 ராசிகள்



வாடிக்கையாளர்களுக்கு பொங்கல் நல்வாழ்த்துகள்!
திருச்சியில் ஓர் இனிய உதயம்!
SR
தரமான மளிகை
மலிவான
விலையில் உங்கள்
இல்லம் தேடி...
ஒரே ஒரு போன் கால்
SR OUR GROCERY
Digital Market @ you're Door Step
No.8, Erumbeeswarar Nagar, Thiruverumbur,
Trichy - 620 013. Tamilnadu.
E-mail:srourgrocery@gmail.cm | Web: srourgrocery.com
9894890808
8610643636

ROLLER SKATING
7 Star
HAPPY PONGAL
AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU
Affiliated to :
AEROSKATOBALL FEDERATION OF INDIA
No.8, First Floor, Erumbeeswarar Nagar,
Thiruverumbur,
Trichy - 620 013.Tamil Nadu.
FIT INDIA
Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846

# போலீஸ் பார்வை

ஜனவரி 2025 மலர் 10 இதழ் 3



**அச்சிட்டு வெளியிடுபவர்** : ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர்** : Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர்** : நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள்** : S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள்** : N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள்** : K.ரவிச்சந்திரன், V.Vivek Bomb, U.மதனகோபால்

**சட்ட ஆலோசகர்கள்** : S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L. S.ரவிச்சந்திரன் M.A., B.L.

**சிறப்பு ஆலோசகர்** : S.செயத்அலி B.Sc., L.L.B.,

**தலைமை நிருபர்கள்** : S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், S.ராஜன், I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், K.மனோகரன், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன்

**சிறப்பு நிருபர்கள்** : SA.மகாதேவன், N.முரளிதரன், P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், KCM.சுரேஷ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, K.பாபு, R.மணிமாறன்

**நிருபர்கள் குழு** : G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், K.அருணாச்சலம், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோன், D.ஹரிஹரன், K.ராஜீவ்காந்தி, V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், P.மணிமாறன், J.ஜெயவேல்முருகன், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, AR.முருகேசன், R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், N.நவீன்குமார், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமன்ட், S.அன்வர் தீன், L.லூயில் பெர்ணான்டஸ், P.ராஜ ராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only

Designed by: QUEEN BEE CREATIVE




# பாலியல் வன்கொடுமை; கேள்விக்குறியாகும் பெண் பாதுகாப்பு?

பெருகிவரும் பாலியல் வன்கொடுமை சம்பவங்களால் பெண்கள் பெண் குழந்தைகள் பள்ளி கல்லூரி மாணவிகள் பாதிக்கப்பட்டு சுதந்திர நாட்டில் பெண்கள் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் அவல நிலை ஏற்பட்டுள்ளது மெய்கூயசும் மிக வருந்தத்தக்க விஷயமாக உள்ளது.

எங்கு பார்த்தாலும் பரவலாக தனிமைபடுகின்ற பெண்கள், பெண் குழந்தைகள், பள்ளி கல்லூரி மாணவிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாகி பெரும் பாதிப்பிற்கு உள்ளாவதுடன் உயிரிழப்புகளும் நேரிடுகின்றன. பல நவீன மயமாக் கப்பட்ட பாதுகாப்பு அம்சங்களை கொண்ட கருவிகள் செயல்படுத்தப்பட்டு காவல் துறையால் நடைமுறையில் உள்ள போதிலும் சில நேரங்களில் பல இடங்களில் பாலியல் வன்கொடுமை மனித மிருகங்களிடம் சிக்கி வாழ்விழந்தும், கொலையுண்டும் உயிரிழப்புகளும் நடைபெறுகின்றன. சமீபத்தில் தமிழகத்தில் பள்ளி, கல்லூரி மாணவிகள், ஆசிரியர்களாலும், பயிற்சியாளர்களாலும் பாலியல் கொடுமைக்குள்ளாகும் அவல நிலை ஏற்பட்டது. இதனால் மாணவிகள் பாதுகாப்பு கேள்விக்குறியாகி அச்சத்திற்கு உள்ளாகினர்.

குறிப்பாக அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவம் பெண்கள் பாதுகாப்புக்கு பெரும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு தீர்வு தான் என்ன? இது போன்று பெண்கள் மாணவிகள் பாலியல் வன்கொடுமை இல்லாமல் சுதந்திரமாக பாதுகாப்புடன் வாழ வேண்டும் என்றால் போக்ஸோ சட்டம் மட்டுமல்லாமல் அரசு மிக கடுமையான சட்டம் இயற்றி நடைமுறைப்படுத்தி பாலியல் வன்கொடுமை மிருகங்கள் மீது மீள முடியாத மிக கடுமையான தண்டனை விதித்து தண்டிக்கப்பட வேண்டும்.

மேலும் இத்தகைய பாலியல் வன்கொடுமையில் ஈடுபடும் மனித மிருகங்கள் தப்பிக்க எந்தவிதமான பின்புல ஆதரவுகளும் இல்லாமல் அரசு காவல் துறை உதவியுடன் இரும்பு கரம் கொண்டு அடக்க வேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்க வழிவகை செய்யும் என்பதே சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்தும் கோரிக்கையாகவும் உள்ளது.


**ஆசிரியர்**

**இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...**

போலீஸ் பார்வை மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.




# சீனாவில் வேகமாகப் பரவும் மெடாநியூமோ வைரஸ்!



சீனாவில் கடந்த சில நாள்களாக கடுமையான காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் மருத்துவ மனைகளில் ஏராளமான மக்கள் குவிந்து வரும் நிலையில், இதற்கு எச்எம்பிவி அல்லது மெடாநியுமோ வைரஸ் என பெயரிடப்பட்டுள்ளது. தற்போது இந்த வைரஸ் தாக்குதல் இந்தியாவிலும் பரவலாம் என மக்கள் அச்சத்துடன் இருக்கின்றனர்.

நுரையீரல் தொற்று பாதிப்புடன் மருத்துவ மனைகளில் நாள்தோறும் நூற்றுக்கணக்கான மக்கள் வருவதாகவும் சீனாவின் பல மருத்துவமனைகளில் நோயாளிகள் குவிந்து வருவதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எச்எம்பிவி எனப்படும் ஹியூமன் மெடாநியூமோவைரஸ் பாதிப்பே இந்த நிலைக்குக் காரணம் என்று தெரிய வந்துள்ளது. ஆனால், இதுவரை அவசர நிலையாக சீன சுகாதாரத் துறையாலோ அல்லது உலக சுகாதார அமைப்பாலோ அறிவிக்கப்படவில்லை. பொதுவாகவே குளிர்காலங்களில் மூச்சு மற்றும் சளி தொந்தரவுகள் அதிகரிக்கும் என்பதால், அதிகமானோர் மருத்துவமனைகளில் குவிவது குறித்து தீவிரமாகக் கண்காணிக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அது என்ன ஹியூமன் மெடாநியூமோவைரஸ்?**

இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது என்னவோ 2001ஆம் ஆண்டு. இது பாதித்தால் நுரையீரல் தொற்று ஏற்பட்டு மூச்சு விடுவதில் பாதிப்பு ஏற்படும். இதன் அறிகுறிகளாக சாதாரண சளி மற்றும் காய்ச்சல்கள் இருக்கும்.

**யாருக்கெல்லாம் தொற்றும்?**

இந்த வைரஸ் எல்லாரையுமே பாதிக்கும் அபாயம் உள்ளது. ஆனால், 5 வயதுக்கு உள்பட்ட குழந்தைகளைத் தாக்கினால் பாதிப்பு அதிகமாக இருக்கும். அதுபோல முதியவர்களுக்கும் கடும் பாதிப்பை ஏற்படுத்தும், அது இல்லாமல் நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள், ஏற்கனவே ஆஸ்துமா போன்ற பிரச்னைகள் இருப்பவர்களுக்கு ஆபத்தானது.

**அறிகுறிகள் என்னென்ன?**

காய்ச்சல், இருமல், மூக்கு ஒழுகுதல், தொண்டை வலி, மூச்சு விடுவதில் சிரமம்.

**எப்படி பரவும்?**

கரோனா போலவே இருமல், தும்மல் மூலம் பரவலாம். அவர்கள் மூக்கு, வாயைத் தொட்டுவிட்டு வேறு எங்கேனும் அவர்களது கையை வைத்து, அந்த இடத்தை மற்றவர் தொட்டால் வைரஸ் பரவலாம்.

**பாதித்தால் என்ன செய்ய வேண்டும்?**

தண்ணீர் அதிகம் குடித்து ஓய்வாக இருப்பது, உடனடியாக மருத்துவ ஆலோசனை பெற்று மருந்துகளை எடுத்துக் கொள்வது அவசியம்.

ஆனால், இந்தியாவில் இதுகுறித்து பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை என சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

# ஹயக்கிரீவரின் வழிபாட்டு ரகசியங்கள்

ஓம் காளி ஓம் நமசிவாய




கருடசித்தர்

Dr.பாலகிருஷ்ண சுவாமி

எரசை, தேனி மாவட்டம்.


நம் அகண்ட பாரத தேசம் ஒரு தெய்வீக தேசமாகும். பல ஆயிரக்கணக்கான ரிஷிகளும், முனிவர்களும், சித்தர்களும், யோகிகளும் வாழ்ந்த புண்ணிய பூமியாகும். நம்முடைய பாரத புண்ணிய தேசத்தில் பல தெய்வ அவதாரங்கள் நிகழ்ந்தன. எப்பொழுதெல்லாம் அதர்மங்கள் பெருகி, தர்மம் குறைகிறதோ அப்பொழுதெல்லாம் தெய்வம் அவதாரம் எடுக்கும்.

அந்த வகையில் விஷ்ணு பெருமானே யுகந்தோறும் அவதாரம் எடுப்பார். அதில் ஹயக்கிரீவரின் அவதாரமும் ஒன்றாகும். ஆனால், விஷ்ணுவுக்கு 10 அவதாரங்கள் என்று சிறப்பாக சொல்லப்படுகின்றது.ஆனால் கிளை அவதாரங்கள் அதிகம் இருக்கின்றது. இந்த 10 அவதாரங்களில் வராத அவதாரங்களும் அதிகம் இருக்கின்றது. அதில் ஹயக்கிரீவர் அவதாரமும் ஒன்றாகும். கல்வியையும், செல்வத்தையும் தரும் அவதாரம் ஆகும்.

**விஷ்ணுவின் 10 அவதாரங்கள்**

1. மச்ச அவதாரம், 2. கூர்ம அவதாரம், 3. வராக அவதாரம், 4. நரசிம்ம அவதாரம், 5. வாமன அவதாரம், 6. பரசுராம அவதாரம், 7. இராம அவதாரம், 8. பலராமர் அவதாரம், 9. கிருஷ்ண அவதாரம், 10.கல்கி அவதாரம்.

ஏற்கெனவே 9 அவதாரங்கள் விஷ்ணு பெருமான் எடுத்துவிட்டார். இன்னும் கலியுகத்தில் 10-வதாக கல்கி அவதாரம் எடுப்பார் என்று வேதத்தில் சொல்லப்படுகின்றது.



**இந்த 10 அவதாரத்தில் இல்லாத கிளை அவதாரமான ஹயக்கிரீவர் அவதாரத்தை பற்றி பார்ப்போம்.**

பிரளய காலத்தில் பிரம்மன் பிரபஞ்சத்தை படைத்துக் கொண்டிருந்தார். அந்த யுக காலங்களில் ஒரு அசுரன் கடுந்தவம் செய்தான். அவன் தவத்தை ஏற்று ஆதி சக்தி பிரசன்னமானாள். என்ன வரம் வேண்டும் என்று கேட்டார். எனக்கு சாகா வரம் வேண்டும் என்று கேட்டான். என்னை யாராலும் கொல்ல முடியாத வரம் வேண்டும் என கேட்டான். ஆனால் அப்படி ஒரு வரம் தர முடியாது என்று ஆதி சக்தி கூறினார்.

அதற்கு அசுரன் மனிதர்களாலும் தேவர்களாலும், அசுரர்களாலும் தெய்வங்களாலும் மரணம் வரக்கூடாது. என்னை போல் குதிரை முகம் கொண்ட ஒருவனால் மட்டுமே மரணம் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டான்.

இந்த அசுரனும் குதிரை முகன் கொண்டவனாக இருந்தான். அதனால், குதிரை முகமும் மனித உடலும் கொண்டவன் தான் ஒருவன் மட்டுமே இருக்கின்றேன், அதனால் யாராலும் தனக்கு மரணம் வராது என்று நினைத்துக் கொண்டு குதிரை முகம் உள்ளவரால் தனக்கு மரணம் வர வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். அதன்படியே ஆதி சக்தியும் வரம் அளித்தார்.

வரம் பெற்ற மமதையில் அனைவரையும் துன்புறுத்த ஆரம்பித்தான். பிரபஞ்சத்தை தான் படைக்க வேண்டும் என்று விரும்பினான். தானே அதற்கு கடவுளாக இருக்க வேண்டும் என்றும் ஆசைப்பட்டான். அதனால், பிரம்மன் படைத்த உயிர்களை அழிக்க ஆரம்பித்தான்.

பிரம்மன் படைப்பை அழித்து விட்டு தானே உலகத்தை படைக்க வேண்டும் என்று எண்ணினான். பிரம்மன் படைப்பதை நிறுத்தினால் தன்னுடைய எண்ணம் நிறைவேறும் என்று நினைத்தான். அதனால், பிரம்மன் படைக்கும் பொருட்களையும் வேதங்களையும் அண்டத்தில் உள்ள சமுத்திர நீரில் ஒளித்துவைத்தான். பின்பு படைப்புத் தொழில் இல்லாமல் அனைத்து அண்டமும் தடுமாறத் தொடங்கியது.

பிரம்மனும் தேவர்களும் அனைத்து உயிர்களும் பதட்டமடைந்தது. பின்பு பிரம்மனும் தேவர்களும் விஷ்ணுவிடம் சென்று முறையிட்டார்கள். விஷ்ணு பகவான் விரைவில் உங்கள் கவலைகளை தீர்ப்பேன் என்று உறுதியளித்தார்.விஷ்ணு பகவான் குதிரை முகம் கொண்ட அசுரனுடன் போர்புரிந்தார். அவன் தலை துண்டாக்கப்பட்டாலும், மீண்டும் ஒன்றிணைந்து உயிர் பெற்றான். அந்த குதிரை முகம் கொண்ட அசுரனை அழிக்க முடியவில்லை.

தேவர்களும் பிரம்ம தேவனும் கலங்கினார்கள். அவன் பெற்ற வரம் பிரம்மாவுக்கும் விஷ்ணுவுக்கும் தெரிய வந்தது. அதன் பின்பு விஷ்ணு பகவான் குதிரை முக அரக்கனை அழிக்க திருவிளையாடல் செய்ய ஆரம்பித்தார். போர் செய்த வில்லை கையில் வைத்துக் கொண்டு போர் செய்யாமல் யோக நிஷ்டையில் ஆழ்ந்தார்.



**விஷ்ணுவின் முகம் குதிரை முகமாக மாறுதல்**

விஷ்ணு பகவானின் திருவிளையாடலை பிரம்ம தேவன் புரிந்து கொண்டார். குதிரை முகம் கொண்ட அரக்கன் தன்னைப் போல் குதிரை முகம் கொண்டவனால் மட்டுமே மரணம் வேண்டும் என்று வரம் வாங்கி இருந்தான். அதனால் குதிரை முகத்தோடு அந்த அரக்கனை அழிக்க விஷ்ணு பகவான் சித்தம் கொண்டார்.

போர் செய்த வில்லோடு விஷ்ணு பகவான் யோக நிஷ்டையில் சமிக்ஞை கொடுத்ததை பிரம்மன் புரிந்து கொண்டார். உடனே வில்லின் நரம்புகளை கடிக்கும் கறையான்களை அவரிடம் அனுப்பி வைத்தார். அது அவர் மேல் ஏறி வில்லின் நரம்பு மீது அமர்ந்து அதை கடிக்கத் தொடங்கியது. நரம்பு அறுந்து வில்லும் நரம்பும் வேகத்தோடு விடுபட்டு விஷ்ணு பகவானின் தலையை துண்டித்தது.

லட்சுமியும் தேவர்களும் கலக்கமடைந்தார்கள். இது நன்மைக்காக நடுந்துள்ளது என்று பிரம்மன் அவர்களுக்கு உண்மையை விளக்கினார். பின்பு அனைவரும் ஒரே மனதாக குதிரை தலையாக மாற வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். தன் விருப்பத்தை நிறைவேற்றுவதைவிட பக்தர்கள் விருப்பத்தையே நிறைவேற்றக் கூடியவர் விஷ்ணு பகவான்.

அவரகளின் பிரார்த்ததனையை ஏற்றுக்கொண்டு, தன்னுடைய தலை துண்டிக்கப்பட்ட கழுத்தில் குதிரை தலையை வரவழைத்தார். குதிரை தலை விஷ்ணு உடலில் பொருந்தியவுடன் கண் விழித்து நிஷ்டையை கலைத்தார். அதைக் கண்ட தேவர்களும் பிரம்மனும் மகிழ்ச்சி அடைந்தனர்.

குதிரை முகம் கொண்ட அரக்கனோடு போல் செய்யத் தொடங்கினார். லட்சுமியும் மகிழ்ச்சி அடைந்தார். சண்டை மிகவும் கடுமையாக இருந்தது. இரண்டு குதிரை முகங்களும் சண்டையிட்டது. குதிரை முகத்தோடு விஷ்ணு வந்ததால் அந்த அரக்கன் அதிர்ச்சி அடைந்தான். அப்பொழுதுதான் அவனுக்கு மரண பயம் வந்தது. கடும் போருக்கு பிறகு குதிரை முகம் கொண்ட

அரக்கனை விஷ்ணு கொன்று அழித்தார்.

பின்பு வேதங்களையும் பிரம்மன் படைக்கும் எழுதுகோல் கருவிகளையும் மீட்டுக் கொண்டு வந்து ஒப்படைத்தார். தன்னுடைய கடமையை முடித்தார். ஆனாலும், ஹயக்கிரீவராக அவதரித்த விஷ்ணுவின் கோபம் தணியவில்லை. உக்கிரமாக இருந்தார்.

தேவர்களும், பிரம்மனும், லட்சுமி தேவியும் பயந்தார்கள். பின்பு பிரம்மன், லட்சுமி தேவியை பார்த்து உங்களால் மட்டுமே ஹயக்கிரீவரை சாந்த படுத்த முடியும் என்று கூறினார். உங்கள் அன்பே அவரை சாந்தப்படுத்தும் என்றார்.

அதன்படி லட்சுமி தேவியும் அன்போடு ஹயக்கிரீவரை நெருங்கி அவரை தொட்டு அவரை சாந்தப்படுத்தினார். ஹயக்கிரீவரும் உக்கிரம் தணிந்து சாந்தமாகி லட்சுமியை தன் மடியில் அமர வைத்துக் கொண்டார். இதைக் கண்ட பிரம்மனும் தேவர்களும் பூமாரி பொழிந்தார்கள். ஸ்ரீ லட்சுமி ஹயக்கிரீவர் என்று போற்றி புகழந்தார்கள்.

அண்டம் முழுவதும் சமநிலை அடைந்து பிரபஞ்சமே அமைதியானது. பிரம்மனும் அனைத்து தேவர்களும் தங்கள் கடமைகளை செய்யத் தொடங்கினார்கள்.

**கல்வியும் செல்வத்தையும் தரக் கூடியவர்**

யோக நிஷ்டையில் இருந்து அவதரித்ததால் ஞான அவதாரமான கல்வி அவதாரமாக விளங்குகிறார். லட்சுமியை மடியில் வைத்திருப்பதால் செல்வமுடம் தரக்கூடியவராக இருக்கிறார்.

ஹயக்கிரீவர் வழிபாட்டால் ஒருவருக்கு கல்வி வளமும், செல்வ வளமும் பெருகும். அவரை முழுமனதோடு வழிபடும்போது நம் மனதில் இருக்கும் தீய எண்ணங்கள் விலகி நம் வாழ்வில் கல்வி ஞானமும் செல்வ வளமுடம் பெருகும். அவரை நாம் தினமும் அன்போடு வழிபட்டால் நம் அனைத்து காரியங்களும் வெற்றியடையும். நம் வாழ்வில் நினைத்த நல்ல காரியங்கள் நடக்கும்.

**ஹயக்கிரீவர் மந்திரம்**

ஓம் ஸ்ரீ ஹயக்கிரீவரே போற்றி
ஓம் கல்வியை அளிப்பவரே போற்றி
ஓம் சகல ஞானத்தையும் அளிப்பவரே போற்றி
துஷ்ட சக்திகளை அழிப்பவரே போற்றி
செல்வத்தை தருபவரே போற்றி
ஓம் ஸ்ரீ லட்சுமி ஹயக்கிரீவரே போற்றி
ஓம் குதிரை முகனே போற்றி
ஓம் ஸ்ரீ மங்மங் கிலியும் கிலியும் மகா
ஹயக்கிரீவரே போற்றி

**ஹயக்கிரீவரை வழிபடும் முறைகள்:**

அஸ்வினி மற்றும் மூல நட்சத்திரத்தன்று தாமரை மலர்களோடு ஹயக்கிரீவருக்கு மஞ்சள் வஸ்திரம் சாத்தி வழிபட சகல நன்மைகளும் நடக்கும்.

மாணவர்களுக்கு கல்வியில் ஞானம் பெருக

வியாழக்கிழமை அன்று படிக்கும் மாணவர்கள் ஹயக்கிரீவருக்கு ஏலக்காய் மாலையோடு துளசியும் தாமரைப் பூவும் வைத்து வழிபட்டால் கல்வி ஞானம் அதிகரிக்கும்.

படிக்கும் மாணவர்கள் அவர் அருக்கில் தான் படிக்கும் புத்தகங்களையும் பேனா பென்சில் போன்ற பொருட்களையும் அவர் பாதத்தில் வைத்து பூசை செய்து எடுத்துக் கொண்டால் கல்வி ஞானமும் மாணவர்களுக்கு உற்சாகமும் கிடைக்கும்.



**கல்விக்கு சொல்ல வேண்டிய மந்திரம்**

சந்தர மண்டல மத்யஸ்தம்
ஹயக் கிரீவம் ஸிநிர் மலம்
ஞ்ஞாந முத்ராதரம் தேவம் சங்க சக்ரதரம் விபும்
புஸ்தகம் வர்ம ஹஸ்ஸேது தாரினம் வானமாலினம்
கிரிட ஹார கேயூர கடாகத்யை ஏலங்க்ருதம்
ஞானனந்த மயம் தேவம்
நிர்மல ஸ்படிகாக்தம்
ஆதாரம் சர்வ வித்யாநாம்
ஸ்ரீ ஹயக்கீரிவம் உபாஸ்மஹே
ஹயக்கிரீவர் காயத்ரி மந்திரம்
ஓம் வாகீவராய வித்மஹே
ஹயக்கிரீவராய தீமஹி
தன்னோ ஹம்ஸப் பிரசோதயாத்
ஸ்ரீ லட்சுமி ஹயக்கிரீவ பஞ்சரத்னம்
ஜ்ஞானநந்தாமலாத்மா கலிகலுஷமஹா
தூல வாதூல நாமா
ஸீமாத்தாத்ம பூமாமம ஹயவதநா தேவதா தாவிதாரி
யதாஸ்வே தாப்ஜ மத்யம் ப்ர
விமல கமல ஸ்ரத்தரா துக்தராஸி
ஸ்மேரா ஸா ராஜ ராஜ பரம்ருதி
நுதிபதம் ஸம்பதம் ஸம்விதாத்தாம்
தாரா தாராதிநாத ஸ்படிகமணி
ஸீதா ஹீர ஹாராபி ராமா
ராமா நந்நாப்தி கத்யா குசலிகுச
பரீரம்ப ஸம்ரம்ப தந்யா
மாந்யாநந்த்யார்ஹ தாஸ்ய
ப்ரணததீ பரித்ராண ஸத்ராத்த தீஷா
தக்ஷா ஸாகூஎத் க்ருதைஷா ஸபதி
ஹயமுகீ தேவதா ஸாஸ்வநாத்ந!




# மதுரை மாநகர காவல் துறை சார்பாக சாலைபாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

## காவல் ஆணையர் J.லோகநாதன் IPS அவர்கள் தொடங்கி வைத்தார்





06.01.2025 அன்று ‘‘சாலை பாதுகாப்பு மாதம்-2025’’ முன்னிட்டு மதுரை தமுக்கம் சந்திப்பில் பொதுமக்களிடையே சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு இருசக்கர வாகன பேரணியை மாநகர காவல் ஆணையர் J.லோகநாதன் IPS அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இருசக்கர வாகன பேரணியானது தமுக்கம் மைதானம் தமிழன்னை சிலையில் இருந்து துவங்கி வடக்குமாசி வீதி சந்திப்பில் நிறைவடைந்தது.

இருசக்கர வாகன பேரணியில் சட்டம் & ஒழுங்கு, போக்குவரத்து, ஆயுதப்படை, ஊர் காவல்படை காவலர்கள் சுமார் 200 பேர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் போக்குவரத்து துணை ஆணையர், காவல் கூடுதல் துணை ஆணையர், போக்குவரத்து உதவி ஆணையர்கள் மற்றும் காவல் ஆய்வாளர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் தமுக்கம் சந்திப்பில் இருசக்கர வாகனங்களில் தலைக்கவசம் அணிந்து சென்ற பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை காவல் ஆணையர் அவர்கள் வழங்கினார்.

சிறப்பு நிருபர்: J.பீமராஜ், மதுரை



# நாகையில் SP திரு.A.K.அருண் கபிலன் IPS அவர்கள் தலைமையில் பொதுமக்கள் குறைதீர் கூட்டம்

நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் காவல் கண்காணிப்பாளர் திரு.A.K.அருண் கபிலன் IPS அவர்கள் பொதுமக்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்து 17 மனுக்களை பெற்றார்கள். பெறப்பட்ட மனுக்களுக்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள்.

ஒவ்வொரு வாரம் புதன்கிழமை தோறும் மக்கள் குறை தீர்க்கும் மனு நாள் நாகப்பட்டினம் மாவட்ட காவல் அலுவலகத்தில் நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்கள்.

பொதுமக்கள் காவல்துறையிடம் தங்கள் குறைகளை நேரடியாக தெரிவிக்க உங்கள் எஸ்.பி.யுடன் பேசுங்கள்: 8428103090 என்ற தொலைபேசி எண் மூலம் கள்ள சாராய விற்பனை கஞ்சா விற்பனை மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள பிரச்சனைகள் குறித்தும் புகார் தெரிவிக்கலாம் என்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள், காவல்துறையினர் கலந்து கொண்டனர்.

இணை ஆசிரியர்: U.மதனகோபால்





செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



# விவசாயியாக மாறாதே



நான் சொல்வது கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும். விவசாயி மகன்களே கொஞ்சம் நேரம் ஒதுக்கி இதை படியுங்கள்.

அந்த காணொளியை பார்த்துவிட்டு அனைவரும் நானும் வேலையை விட்டுவிட்டு விவசாயம் செய்ய வரப்போகிறேன் என்று நிறைய பேர் பதிவு பண்ணி இருந்தார்கள் அதனால் தான் இந்த பதிவு.

விவசாயி மகன்களே, நீங்கள் நன்றாக படித்து நல்ல வேலையில் இருந்தீர்கள் என்றால் கண்டிப்பாக சில அழுத்தங்கள் நீங்கள் வேலை செய்யும் இடங்களில் இருக்கத்தான் செய்யும் ஒரு 15 வருடங்கள் வேலை செய்து உங்களை தயார் படுத்திக் கொள்ளுங்கள். பொருளாதாரத்தில் மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

ஒரு 10 லிருந்து 20 லட்சம் கையில் வைத்துக் கொண்டே நீங்கள் விவசாயியாக மாற முற்பட வேண்டும்.

நமது பாட்டனும் நமது முப்பாட்டனும் பார்த்த விவசாயம் என்பது வேறு, இப்போது இருக்கக்கூடிய விவசாயம் என்பது வேறு, இப்போது செய்யக்கூடிய விவசாயத்தில் எந்த ஒரு பொருளாதார முன்னேற்றமும் இல்லை.

எனவே நீங்கள் திட்டமிட்டு ஒரு ஒருங்கிணைந்த பண்ணை உருவாக்க வேண்டும். ஒரு ஐந்து ஏக்கரில் அப்போதுதான் நீங்கள் பொருளாதாரத்தில் முன்னேற முடியும்.

சின்ன சின்ன வயல்களை வைத்துக்கொண்டு நான் விவசாயம் செய்து முன்னேற போகிறேன் என்பது இன்றைய காலகட்டத்தில் முட்டாள்தனம். அதை உணர்ந்தவன் என்ற முறையில் சொல்கிறேன்.

எனவே யாரும் குறிப்பாக, விவசாயி மகன்களே நீங்கள் வேலையை விட்டுவிட்டு விவசாயம் செய்ய வர வேண்டாம்.

விவசாயம் செய்ய ஆசைப்பட்டால் முதலில் நீங்கள் செய்ய வேண்டியது ஒரு ஐந்து ஏக்கர் நிலம் வாங்க வேண்டும் ஒரே இடத்தில்.. பிறகு அந்த இடத்தில் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாவதாக அதைச் சுற்றி வேலி அமைக்க வேண்டும். மூன்றாவதாக அங்கு நல்ல நல்ல பலன் தரக்கூடிய மரங்களை முதலில் வளர்க்க வேண்டும்.

பிறகு தினமும் தினம் தினம் வருமானம் வரும் அளவிற்கு உங்களை தயார் செய்ய வேண்டும்.

குறிப்பாக ஒரு 50 கோழிகள் வளர்க்கலாம்.

இரண்டு பசு மாடுகள் வளர்க்கலாம்.

ஒரு எருமை மாடு வளர்க்கலாம்.

ஐந்து வெள்ளாடு வளர்க்கலாம்.

ஒரு பத்து வாத்து வளர்க்கலாம்.

சின்ன குளம் வெட்டி நமக்காக மீன் வளர்க்கலாம்.

நாம் பயன்படுத்த கூடிய அளவிற்கு அனைத்து காய்கறிகளையும் அங்கு மிகக் குறைந்த இடத்தில் உருவாக்க வேண்டும்.

இவையெல்லாம் சாத்தியப்படுத்திவிட்டு சாத்தியம் என்றால் மட்டும் நீங்கள் வேலையை விட்டுவிட்டு விவசாயம் செய்ய வர வேண்டும்.

இல்லையென்றால் நீங்கள் வேலை பார்க்கும் போது இருந்த மன அழுத்தத்தை விட இங்கு அதிகமான மன அழுத்தத்தை உணர வேண்டி இருக்கும். பிறகு அனைத்து பொருளாதாரத்தையும் இழந்து மீண்டும் வேலைக்கு செல்ல வேண்டி இருக்கும். எனவே விவசாயி மகன்களை கொஞ்சம் யோசித்துக் கொள்ளுங்கள்.

ஆலோசனை வேண்டுமென்றால் whatsapp 077083 56445 மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

நன்றி அன்புடன் உங்கள்...
இயற்கையாளன் தவம்






எம்.ஜி.ஆர் துப்பாக்கியால் சுடப்பட்டு, ஆபரேஷன் நடந்து காப்பாற்றப்பட்டபோதும் தொண்டையில் சிக்கிய தோட்டாவின் சிதறல் ஒன்று மருத்துவர்களால் நீக்கப்படவில்லை. சிக்கலான இடத்தில் தங்கிவிட்டது. அப்படி அதை நீக்க முயற்சித்தால் அது அவரின் உயிருக்கே ஆபத்தாகும் என்பதால் அந்த முயற்சி கைவிடப்பட்டது.

எம்.ஜி.ஆர் உடல் நலம் தேறியதும் ஒருநாள், இரவோடு இரவாக மருதமலை கோயிலுக்கு அழைத்துச் சென்று மூலஸ்தானத்திலேயே எம்.ஜி.ஆரை நிறுத்தினார் சின்னப்பா தேவர்.

முருகனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்ட போது, "முருகா உன் கோயிலுக்கு மின்சார விளக்கேத்தி வைத்தவர், இன்று இருளாகிக் கிடக்கிறார். அவர் வாழ்க்கைல நீ ஒளியேற்றியே ஆகணும். இதை நீ செய்யலேன்னா, உன் கோயிலுக்கு குண்டு வச்சிடுவேன். மறுபடியும் நீ இருட்டில் இருக்கவேண்டி இருக்கும்" எனக் கோபம் கொண்ட சித்தரபோல முருகனுடன் சண்டை போட்டு வேண்டிக் கொண்டிருந்தார் சின்னப்பா தேவர்.

அன்பு அதிகமானால் கண்ணீர் வடித்தபடியும், கோபம் அதிகமானால் ஏக வசனத்தில் கடுமையாக சண்டை போடுவதும், கடவுள் முருகனுக்கும் பக்தன் தேவருக்கும் இடையே உள்ள பாசப் பிணைப்பான ஒரு வழக்கம். பிறகு எம்.ஜி.ஆரை அழைத்துக் கொண்டு சென்னை வந்துவிட்டார்.

சரியாக ஒரு வாரம் தான்...

எம்.ஜி.ஆருக்கு கடுமையான தும்மல் ஏற்பட்டது. பலமாக தும்மினார். அந்த தோட்டா சிதறல் மூக்கின் வழியே வெளியே வந்துவிட்டது. உண்மையில் இது ஒரு அதிசயமான நிகழ்ச்சி தான். முருகனிடம் அப்படி சண்டை போட்டு, தேவர் வேண்டிக் கொண்டதால் தான் இது நிகழ்ந்தது என்று சொல்வார்கள்.



## கிட்னி முத்திரை

சுண்டு விரலின் நுனியையும், மோதிர விரலின் நுனியையும் பெருவிரலின் அடியில் வைத்து, அந்த விரல்களின் பின்புறத்தை மெதுவாகப் பெருவிரலால் அழுத்தவும். தேவையற்ற நீர் அகன்று, உடல்சூட்டை அதிகப்படுத்தும்.
நெஞ்சு சளி, சிறுநீரகப் பிரச்சினை தீரும்.
சம்மணகாலிட்டு அமர்ந்து தினமும் 10 நிமிடம் இரண்டு கைகளிலும் செய்க.



# இராமநாதபுரத்தில் AI CCTV கண்காணிப்புகேமரா கட்டுபாட்டு அறை

**SP G.சந்தீஷ் IPS திறந்து வைத்தார்**



இராமநாதபுரம் மாவட்டத்தில், இராமநாதபுரம் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் AI தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய CCTV கேமராக்களை கண்காணிக்கும் அறையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.G.சந்தீஷ். IPS., அவர்கள் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்வின் போது உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.N.U.சிவராமன்.IPS., அவர்கள் உடனிருந்தார்கள்.

இராமநாதபுரம் முழுவதும் பொருத்தப்பட்டுள்ள 120 CCTV கேமராக்களில் காணப்படக் கூடிய நவீன தொழில்நுட்ப அம்சங்கள்.

1. விரிவான சிசிடிவி கண்காணிப்பு: (Comprehensive CCTV Monitoring) பிரிவின் முக்கிய சந்திப்புகள், செயல் விளக்க இடங்கள், பேருந்து நிலையங்கள், கலெக்டர் அலுவலகம் போன்ற இடங்களில் நிறுவப்பட்ட 120 சிசிடிவி கேமராக்களின் நிகழ்நேர கண்காணிப்பு.

2. குற்றச் சம்பவங்கள் நடைபெறும் இடங்களில் AI கேமரா பயன்பாடு: (AI Camera Deployment at Crime Hotspots) அடையாளம் காணப்பட்ட குற்றச் சம்பவங்கள் நடைபெறும் இடங்களில் 20 AI-இயங்கும் கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

உடை நிறம், பைக் நிறம், தலைக்கவசம் மற்றும் குற்றச் சம்பவங்களின் போது பயன்படுத்தப்படும் பிற அடையாளம் காணக்கூடிய விவரங்கள் போன்ற குறிப்பிட்ட அம்சங்களைப் பயன்படுத்தி சந்தேக நபர்களைக் கண்காணிக்கும் திறன் கொண்டது.

3. ANPR கேமரா கவரேஜ்: (ANPR Camera Coverage) பிரிவின் முக்கியமான நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் 25 தானியங்கி எண் தகடு அங்கீகாரம் (ANPR) கேமராக்கள் நிறுவப்பட்டுள்ளன.

4. சோதனைச் சாவடி கண்காணிப்பு: (Check post Surveillance) பிரிவில் உள்ள அனைத்து 5 சோதனைச் சாவடிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன, இது போக்குவரத்து மற்றும் செயல்பாடுகளை முழுமையாகக் கண்காணிப்பதை உறுதி செய்கிறது.

5. காவல் நிலைய சிசிடிவி கண்காணிப்பு: (Police Station CCTV Monitoring) உட்பிரிவுக்குள் உள்ள 5 காவல் நிலையங்களின் செயல்பாடுகளையும் முகாம் அலுவலகத்திலிருந்து நேரடியாகக் கண்காணிக்க முடியும். குறிப்பாக பொதுமக்கள் காத்திருக்கும் பகுதிகள் மற்றும் வரவேற்புப் பகுதிகள் இதில் அடங்கும்.

6. ரோந்து வாகன ஒருங்கிணைப்பு: (Patrol Vehicle Integration) 3 நகர துணைப்பிரிவு ரோந்து வாகனங்களில் கேமராக்கள் மற்றும் ஜிபிஎஸ் சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த கேமராக்களிலிருந்து நிகழ்நேர காட்சிகளையும் இந்த வாகனங்களின் இருப்பிடக் கண்காணிப்பையும் காணலாம்.

7. பீட் வாகனக் கண்காணிப்பு: (Beat Vehicle Tracking)உகந்த ரோந்து செயல்திறனை உறுதி செய்வதற்காக அனைத்து பீட் வாகனங்களின் நிகழ்நேர இருப்பிடக் கண்காணிப்பு மற்றும் இயக்கப் பதிவு.

நிருபர்: R.செந்தில்குமார், ராமநாதபுரம்.



**சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்**
**இம்மையும் இன்பம் தரும்** *குறள் 98*

பிறர்க்குத் துன்பம் விளைவிக்கும் சிறுமையிலிருந்து நீங்கிய இனிய சொற்கள் மறுமைக்கும் இம்மைக்கும் வழங்குவோனுக்கு இன்பம் தரும்.

# செங்குன்றம் காவல் மாவட்ட காவல்துறை சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு



செங்குன்றம் காவல் மாவட்ட காவல்துறை மற்றும் போக்குவரத்து காவல்துறை சார்பில் பல்வேறு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் போதையில்லா தமிழகம் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது.

அதன் ஒரு பகுதியாக ஜனவரி 1 அன்று புத்தாண்டை பொதுமக்கள், காவலர்கள், சமூக ஆர்வலர்களோடு மகிழ்ச்சியாக கொண்டாடும் விதத்தில் செங்குன்றம் காவல் மாவட்ட துணை ஆணையர் மருத்துவர் கே.எஸ்.பாலகிருஷ்ணன் தலைமையில் கேக் வெட்டி கொண்டாடினர்.

இந்நிகழ்வில் போக்குவரத்து காவல் துணை ஆணையர் அன்பு, செங்குன்றம் காவல் சரக உதவி ஆணையர் ராஜா ராபர்ட், நுண்ணறிவு பிரிவு உதவி ஆணையர் பிராங்கிளின் ரூபன், செங்குன்றம் காவல் ஆய்வாளர் புருஷோத்தமன், போக்குவரத்து ஆய்வாளர் சோபிதாஸ், உதவி ஆய்வாளர்கள் ரமேஷ், சரவணன் (போக்குவரத்து), மனோகரன், செங்குன்றம் பேரூராட்சி தலைவர் கு.தமிழரசி குமார், ஸ்ரீ ஹரி லா அசோசியேட்ஸ் வழக்கறிஞர்கள் எம்.தேவராஜ், கந்தவேல், சரவணன் மற்றும சமூக செற்பாட்டாளரும் பத்திரிகையாளருமான எம்.முகம்மது அபுபக்கர், பாரத்குமார் உள்ளிட்ட காவலர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சாலைகளில் சென்று கொண்டிருந்த வாகன ஓட்டிகளிடம் சாலை பாதுகாப்பு குறித்த விழிப்பு உணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்வின் போது சாலையில் செல்லும் போது விதிமுறைகளை பின்பற்ற வேண்டும்; அதிவேக பயணம் நொடியில் மரணம்; அதிக பாரம் ஏற்றி வாகனம் ஓட்டாதீர்; மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டாதீர்; செல்போன் பேசிக் கொண்டு வாகனம் ஓட்டாதீர்; உயிரை காக்க தலைக்கவசம் அணிவீர்; சரக்கு வாகனம் மீது ஆட்களை ஏற்றாதீர் உள்ளிட்டவைகளை கஞ்சா, போதை மாத்திரைகள், பான் மசாலா, குட்கா உள்ளிட்ட போதை பொருள்கள் நடமாட்டம் இருந்தால் பொதுமக்கள் காவல்துறை கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டுமென்றும் விழிப்பு உணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முதன்மை ஆசிரியர்:
Dr.S.முருகானந்தம்(எ)நந்தா







# திண்டுக்கல் CCTV கேமரா கட்டுபாட்டு அறை

## SP A.பிரதீப் IPS தொடங்கி வைத்தார்

23.12.2024 திண்டுக்கல் மாவட்டம் நகர் வடக்கு காவல் நிலையம் அருகே புதுப்பிக்கப்பட்ட காவல் கண்காணிப்பு CCTV கேமரா கட்டுப்பாட்டு அறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் A.பிரதீப் IPS அவர்களின் தலைமையில் திறக்கப்பட்டது.

இதில் நகர் பகுதியில் புதிதாக கேமராக்கள் பொருத்தப்பட்டு, போக்குவரத்து நடைமுறைகள், குற்றத்தடுப்பு நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாவட்ட தலைமையக கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.மகேஷ் அவர்கள், மாவட்ட சைபர் கிரைம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.தெய்வம் அவர்கள், நகர் உட்கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் திரு.சிபின். IPS, அவர்கள், ஊரக உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் திரு.சிபி சாய் சௌந்தர்யன் அவர்கள், திண்டுக்கல் நகர் போக்குவரத்து ஆய்வாளர் திரு.பழனிச்சாமி அவர்கள், காவலர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நிருபர்: குருசரவணன், திண்டுக்கல்.



## திண்டுக்கல் காவல்துறை சார்பாக கல்லூரி மாணவிகளுக்கு 'போலீஸ் அக்கா' திட்ட விழிப்புணர்வு

06.01.2025 திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர் A.பிரதீப்., IPS., அவர்களின் அறிவுறுத்தலின்படி ரெட்டியார்சத்திரம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள சுரபி நர்சிங் கல்லூரியில் ஊரக அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் திருமதி.முருகேஸ்வரி அவர்களின் தலைமையில் மாணவிகளிடையே போலீஸ் அக்கா திட்டம் குறித்து விழிப்புணர் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் போலீஸ் அக்கா திட்டம் குறித்தும், அதனை பயன்படுத்தும் முறைகள் குறித்தும், இதில் தரப்படும் தகவல்கள் ரகசியம் பாதுகாக்கப்படும் என்பதும், தங்களுக்கு ஏற்படும் பிரச்சனைகள் குறித்து எவ்வித தயக்கம் இன்றி உடனே தகவலை தெரிவிக்கும் படியும், அதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், பெண்கள் மற்றும் குழந்தை களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் குறித்தும் எடுத்துக் கூறி துண்டு பிரசுரங்கள் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

நிருபர்: குருசரவணன், திண்டுக்கல்.

# மெத்த பெட்டமைன் கடத்தி வந்த பெண் உள்பட 4 ஐடி ஊழியர் கைது

## கொடைக்கானல் காவல்துறையினர் அதிரடி

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் புத்தாண்டு விடுமுறையை கொண்டாடுவதற்காக சுற்றுலாப் பயணிகள் குவிந்தனர். இதனால் போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டனர். கொடைக்கானல் அப்சர்வேட்டரி பகுதியில் சந்தேகப்படும் வகையில் வந்த கேரள மாநில பதிவு எண் கொண்ட காரை நிறுத்தி விசாரித்தனர்.

இதில் அவர்கள் கேரள மாநிலம் கண்ணூரை சேர்ந்த ரஞ்சிஸ் (27), முகமது நசீர் (24), ஜிஷ்ணு (22), அசாம் மாநிலத்தை சேர்ந்த பிரதிக்ஷா (25) என்பதும், பெங்களூரில் உள்ள ஐடி, நிறுவனத்தில் பணிபுரிந்ததும் தெரிந்தது. தொடர்ந்து விசாரித்தபோது காரில் இருந்தபடி ஒருவர் ஒரு பொட்டலத்தை வெளியில் தூக்கி எறிந்தார்.

போலீசார் அதை எடுத்து பிரித்து பார்த்த போது பல லட்சம் மதிப்புள்ள உயர்ரக மெத்தபெட்டமைன் போதை பொருள் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் போதை பொருள், காரை பறிமுதல் செய்து 4 பேரையும் கைது செய்தனர்.



இந்த போதை பொருள் எங்கிருந்து கடத்தி வரப்பட்டது, யாரிடம் வாங்கினார்கள், இவர்களுடன் வேறு யார் தொடர்பில் உள்ளனர் என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த வழக்கை கொடைக்கானல் காவல் துணை கண்காணிப்பாளர் DSP.திருமதி.மதுமதி ,அவர்கள் உத்தரவின்பேரில் காவல் ஆய்வாளர் திரு.பாஸ்கரன் , போக்குவரத்து சார்பு ஆய்வாளர்திரு. முத்துராம லிங்கம் உள்ளிட்ட காவலர்கள் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு உள்ளனர்

நிருபர்: R.குப்புசாமி. கொடைக்கானல்.








சென்னை அம்பத்தூர் குடிசை மாற்று வாரியத்தில் வீடு வாங்கி தருவதாக

# போலி ஆவணங்கள் வைத்து பண மோசடி செய்த நபர் கைது

காவல் ஆய்வாளர் கிருஷ்ணகுமார் காவல் குழுவினர் அதிரடி

சென்னை அம்பத்தூர் தாளம்பூரில் வசிக்கும் திரு.சக்திவேல் என்பவர் அம்பத்தூர் காவல் நிலைய குற்ற பிரிவில் தன் நண்பரின் மூலம் பழக்கமான கஜேந்திரன் என்பவர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் அடுக்குமாடி குடியிருப்பில் வீடு வாங்கி தருவதாக போலி ஆவணங்களை காண்பித்து ஒரு வீட்டிற்கு ரூ.1,63,000 வீதம் எனக்கும் என் குடும்பத்தாருக்கும் நண்பருக்கும் சேர்த்து மொத்தம் 9 வீடுகள் ஒதுக்கீடு செய்து தருவதாக கூறி ரூபாய் 15 லட்சம் வாங்கி, போலி ஆவணங்களை வைத்து வீடு வாங்கி தராமல் ஏமாற்றி விட்டதாக புகார் அளித்தார்.



**புகார்தாரர் சக்திவேல்**

புகாரை பெற்றுக் கொண்டு வழக்கு பதிவு செய்து குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு. கிருஷ்ணகுமார் அவர்கள் தலைமையில் உதவி ஆய்வாளர் திரு. சரவணன் மற்றும் காவல் குழுவினர் தீவிர விசாரணை மேற்கொண்டு குற்றவாளியை தேடி வந்தனர்.

இந்நிலையில் காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் அம்பத்தூர் காமராஜநகர் ஜீவா தெருவில் காவல் குழுவினர் கண்காணிப்பில் ஈடுபட்டபோது சக்திவேல் அவர்கள் புகார் அளித்த கஜேந்திரன் என்ற நபர் அடையாளத்தில் நடந்து வந்த நபரை பிடித்து விசாரணை செய்தனர்.



**குற்றவாளி கஜேந்திரன்**

அதில் அவர் முன்னுக்குப் பின் முரணாக பேசியதால், அவரிடம் தீவிர விசாரணை செய்தனர். அந்த நபர் தனது பெயர் ராஜேந்திரன், தந்தை பெயர் பாலன் அம்பத்தூர். காமராஜ நகர் ஜீவா தெருவில் வசித்து வருவதாகவும், சென்னை அசோக் நகரில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் புதிய அடுக்குமாடி குடியிருப்பில் வீடு வாங்கி தருவதாக போலி ஆவணங்களை காண்பித்து சக்திவேல் என்பவரிடம் ரூ.15 லட்சத்தை கொஞ்சம் கொஞ்சமாக நேரடியாகவும் வங்கி கணக்கில் மூலமாகவும் பெற்றுக் கொண்டு ஏமாற்றிய கஜேந்திரன் என்ற குற்றவாளி என்பது தெரியவந்தது.



**காவல் ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார்**

அதன் பேரில் கஜேந்திரனை போலீஸார் கைது செய்து, மேலும் ஏதேனும் குற்ற வழக்குகளில் தொடர்புடைய நபரா என கண்டறிய வழக்கு பதிவு செய்து அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 15 நாள் நீதிமன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

பணமோசடி வழக்கில் புகாரின் பேரில் தீவிர விசாரணை செய்து குற்றவாளியை கைது செய்த அம்பத்தூர் காவல் நிலைய குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.கிருஷ்ணகுமார் அவர்கள் தலைமையிலான காவல் குழுவினரை மேலதிகாரிகள் பாராட்டினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன்மை ஆசிரியர்: மருகண்ணன், சென்னை.

# அரசால் தடை செய்யப்பட்ட லாட்டரி விற்பனை செய்த கும்பல் கைது

## கோவை மாவட்ட காவல் துறையினர் அதிரடி

கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி பகுதியில் சட்டத்திற்கு விரோதமாக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கேரள லாட்டரி சீட்டுகளை விற்பனைக்கு வைத்திருந்த நபரை கைது செய்த கோவை மாவட்ட காவல்துறையினர்.

தமிழக காவல் துறை இயக்குனர் அவர்களின் அறிவுறுத்தலின்படி,கோவை மாவட்டத்தில் நடைபெறும் சட்ட விரோத செயல்களை தடுக்கும் பொருட்டு கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் SP Dr.K.கார்த்திகேயன் IPS அவர்கள் முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.

அதன் அடிப்படையில் (24.12.2024) கருமத்தம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கேரளா லாட்டரி சீட்டுகளை விற்பனைக்கு வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில் கருமத்தம்பட்டி காவல் நிலைய காவல்துறையினர் சம்பவம் இடமான செந்தில் நகர் அருகே சென்று சோதனை மேற்கொண்ட போது கேரளா லாட்டரி சீட்டுகளை விற்பனைக்கு வைத்திருந்த கருமத்தம்பட்டி பகுதியைச் சேர்ந்த சண்முகம் மகன் நாகராஜ்(42) என்பவரை கைது செய்து அவரிடமிருந்து சுமார் ரூ.2,22,77,000 /-, 1,900 No's தமிழக அரசால் தடை செய்யப்பட்ட கேரளா லாட்டரி சீட்டுகள், செல்போன்-2 மற்றும் இருசக்கர வாகனம்-1 ஆகியவற்றை பறிமுதல் செய்து மேற்படி நபரை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

மேலும் மாவட்டம் முழுவதும் நடந்த சோதனைகளில் சட்ட விரோதமாக லாட்டரி விற்பனை செய்த 23 நபர்களை கைது செய்து அவர்கள் மீது 15 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தபட்டனர். சட்டத்திற்கு புறம்பாக குற்ற செயல்களில் யாரேனும் ஈடுபட்டால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் எச்சரித்துள்ளார்.

குற்றங்களை தடுத்திட பொதுமக்கள் அச்சம் கொள்ள வேண்டாம். தயங்காமல் அழைத்திடுங்கள் கோவை மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை எண் 94981-81212 மற்றும் வாட்சப் எண் 77081-00100 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம். தகவல் தெரிவிப்போரின் ரகசியங்கள் காக்கப்படும்.

நிருபர்: P.நடராஜ், கோவை.



கமாண்டோ பயிற்சியில்

# சிறப்பாக செயல்பட்டு பதக்கம் வென்ற ஆயுதப்படை காவலர் திரு.ராஜு

**திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் முனைவர். பா.மூர்த்தி IPS அவர்கள் பாராட்டு**



தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு கமாண்டோ பயிற்சி பள்ளியில் 14.11.2024 முதல் 28.12.2024 வரை நடைபெற்ற 56 நாட்கள் கமாண்டோ பயிற்சியில் தென் மண்டல மாவட்டங்களில் இருந்து 63 காவலர்கள் கலந்துகொண்ட இப்பயிற்சியில் திருநெல்வேலி மாவட்ட ஆயுதப்படை இரண்டாம் நிலை காவலர் திரு.ராஜு அவர்கள் ஒட்டுமொத்த போட்டி களில் வெற்றி பெற்று பதக்கம் மற்றும் 3 கேடயங்கள் பெற்றுள்ளார். பின் பயிற்சி முடித்து வந்த காவலர் திரு.ராஜுவை 03.01.2025 அன்று திருநெல்வேலி சரக காவல்துறை துணை தலைவர் முனைவர். பா.மூர்த்தி IPS அவர்கள் திருநெல்வேலி சரக அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டுகளை தெரிவித்தார்.

நிருபர்: ஆறுமுகச்சாமி,
திருநெல்வேலி





# ‘காவல் பணி, சவால்கள் நிறைந்த பணி’

## கடலூர் மாவட்டத்தில் பயிற்சி முடித்த ஊர்க்காவல் படை வீரர்களுக்கு காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.இராஜாராம் அறிவுரை



கடலூர் மாவட்டம் ஊர்க்காவல் படையில் 2024-தேர்வு செய்யப்பட்ட 20 ஊர்க்காவல் படையினர் 45 நாட்கள் அடிப்படை கவாத்து பயிற்சி, உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு இன்றுடன் நிறைவுபெற்றது.

பயிற்சி முடித்த ஊர்க்காவல் படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை கடலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.இராஜாராம் அவர்கள் ஏற்று கொண்டார்.

பின்னர் பயிற்சியில் சிறப்பாக செயல்பட்ட நபர்களுக்கு பதக்கங்களை அணிவித்து கௌரவித்து பேசுகையில், காவல் பணி சவால்கள் நிறைந்த பணி, ஊர்காவல் பணியில் இடர்பாடுகள் இருந்தாலும் கடலூர் மாவட்ட ஊர்க்காவல் படையினர் சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள். பணியில் சளைத்தவர்கள் யாரும் இல்லை. கடலூர் மாவட்ட ஊர்க்காவல் படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள் இலக்குகளை அடைய செயல்திட்டங்களை வகுத்துக் கொண்டு கடமை ஆற்றுகையில் பாரபட்சம் இல்லாமல் பணி மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கினார்.



தொடர்ந்து ஊர்க்காவல் படையில் 20 ஆண்டுகள் சிறப்பாக பணியாற்றிய ஊர்க்காவல் படையினருக்கு சான்றிதழ்கள் வழங்கி பாராட்டினார். இந்நிகழ்வில் துணை காவல் கண்காணிப்பாளர் திரு.ரூபன்குமார், விழுப்புரம் சரக உதவி தளபதி திரு.கேதர்நாதன், கடலூர் மாவட்ட ஊர்க்காவல் படை வட்டாரத் தளபதி திரு. A. அம்ஜத்கான், ஊர்க்காவல் படை துணை வட்டார தளபதி திருமதி கலாவதி, ஆயுதப்படை காவல் ஆய்வாளர் திரு.அருட்செல்வன், ஊர்க்காவல் படை உதவி ஆய்வாளர் சிவக்குமார் மற்றும் படைத்தளபதிகள் எழுத்தர் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சிறப்பு நிருபர்: P.முத்துக்குமரன், கடலூர்.




# ஆண்டு தொடக்கமே அட்டகாச பலன் பெறும் 5 ராசிகள்

***சூரியன் மகர ராசியில் நுழைகிறார்; செவ்வாய் மிதுன ராசியில் நுழைகிறார்; புதன் மகர ராசியில் நுழைகிறார்; மீன ராசியில் சுக்கிரன் நுழைகிறார். ஜனவரி மாத தொடக்கத்தில் உருவாக்கக்கூடிய புதாதித்யா யோகத்தால் 5 ராசியை சேர்ந்தவர்களுக்கு மகிழ்ச்சி அதிகரிக்கும். ஜனவரி மாத ராசிபலன் 2025 ரிஷிபம், கடகம், துலாம், விருச்சிகம், கன்னி, மற்றும் மீனம் ஆகிய ராசிக்காரர்களுக்கான ஜனவரி மாத பலன்களை பார்ப்போம்.***

### ரிஷப ராசி

ஜனவரி மாதத்தில் விருப்பங்கள் நிறைவேறும். உங்கள் வாழ்க்கையில் அனைத்து துறையிலும் சிறப்பான வெற்றியை எதிர்பார்க்கலாம். சமூகத்தில் உங்களின் மரியாதை அதிகரிக்கும். பெற்றோர் மற்றும் பெரியவர்களுடன் நெருக்கம் உண்டாகும். உங்களின் பேச்சு மற்றும் செயலில் நிதானத்தைக் கடைப்பிடித்தால் சிறப்பான வெற்றியை எதிர்பார்க்கலாம். உங்களின் உறவுகள் மேம்படும். வெளியூர், வெளிநாடு தொடர்பான தொழில் செய்யக்கூடியவர்களுக்கு எதிர்பாராத சிறப்பான பலன்கள் கிடைக்கும். வேலையில் கூடுதல் வருமானம் கிடைப்பதற்கான வாய்ப்புகள் உண்டு. விளையாட்டு போட்டி, தேர்வுக்கு தயாராக கூடியவர்களுக்கு சிறப்பான வெற்றி உண்டாகும். ஆரோக்கியம் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.

### கடக ராசி

ஜனவரி மாதத்தில் உங்களின் நேரத்தையும், ஆற்றலையும் சரியாக பயன்படுத்தினால் எல்லாவிதத்திலும் சிறப்பான பலனை எதிர்பார்க்கலாம். முதலீடு செய்யும் முன் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது நன்று.

வெளிநாடு, வெளிநாடு தொடர்பான வியாபாரம் செய்யக் கூடியவர்களுக்குச் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் செயலுக்கு குடும்ப உறுப்பினர்களின் மூலம் ஆதரவைப் பெறலாம். பணியிடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் காதலை வெளிப்படுத்த நினைப்பவர்களுக்கு சாதகமான சூழல் அமையும். வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக பயணம் செல்ல வாய்ப்புள்ளது.

### கன்னி ராசி

ஜனவரி மாதத்தில் நல்ல வாய்ப்புகள் தேடி வரும். உங்களின் பெரிய பொறுப்புகளை நிறைவேற்றி நிம்மதி அடைவீர்கள். பணியிடத்தில் உங்களுக்கு புதிய பதவி அல்லது பொறுப்புகள் வழங்கப்பட வாய்ப்புள்ளது. உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவை பெறுவீர்கள். நீங்கள் செய்யக்கூடிய தொழில், வியாபாரம் தொடர்பாக முன்னேற்றத்தை காண்பீர்கள்.

மாதத்தின் இரண்டாம் பகுதியில் காதல், திருமண உறவில் சில மன கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் பேச்சில் நிதானத்தை கடைப்பிடிப்பது நல்லது. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடக்க வாய்ப்புள்ளது. உங்கள் வசதி மற்றும் ஆடம்பரமான மனப்பான்மை காரணமாக செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### துலாம் ராசி

ஜனவரி மாதத்தில் வேலை தேடுபவர்களுக்கு எதிர்பார்த்த வகையில் நல்ல வாய்ப்புகள் அமையும். போட்டித் தேர்வு, விளையாட்டு போட்டிகளில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் சாதகமான பலன்கள் கிடைக்கும். நிதி சார்ந்த நன்மைகள் கிடைக்கும். இந்த மாதத்தில் முதலீடு செய்யும் விஷயத்தில் கவனம் தேவை. குறுகிய கால லாபத்திற்கு ஆசைப்பட்டு எதிலும் பணம் முதலீடு செய்ய வேண்டாம். காதல் வாழ்க்கை தொடர்பாக சாதகமான சூழலில் நிலவும். பெண்கள் பணியிடத்திலும், குடும்பத்திலும் சமநிலையைப் பராமரிப்பது கடினமாக இருக்கும்.

### மீன ராசி

ஜனவரி மாதத்தில் மங்களகரமானதாகவும், வெற்றிகள் குவியக்கூடியதாக இருக்கும். மாத தொடக்கத்தில் உங்களை நேசிப்பவர்கள் அல்லது செல்வாக்கு மிக்க நபர்களை சந்திக்க வாய்ப்புள்ளது. வீடு, மனை வாங்க திட்டமிட்டுள்ளவர்களுக்கு சாதகமான சூழல் நிலவும். உங்களின் வருமான ஆதாரங்கள் உயரும். நீதிமன்ற வழக்கு விஷயத்தில் உங்களுக்கு சாதகமான தீர்ப்பு கிடைக்க வாய்ப்புள்ளது. பண முதலீடு செய்யும் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது சிறப்பான பலனை தரும்.




மேஷ இராசியினருக்கு புத்தாண்டின் முதல் மாத தொடக்கத்தில் சற்று வேலை பளு நிறைந்ததாக இருக்கும். நேர நிர்வாகத்தை சரியாக மேற்கொண்டால் உங்கள் சிரமங்கள் எளிதாக நீங்கிவிடும். குடும்பத்திலும், பணியிடத்திலும் உங்கள் விட்டு விட்டாலே சூழல் சரியானதாக மாறிவிடும். உங்கள் தொழில் மற்றும் வியாபாரத்தில் சிறப்பான நிலையை பெற காத்திருக்க வேண்டியது இருக்கும்.



இருப்பினும் தொழிலில் சாதகமான பலன்கள் கிடைக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபங்கள் பெறுவீர்கள். காதல் உறவில் ஏற்படக்கூடிய தவறான புரிதலை, பொறுமையுடன் கையாளவும். திருமண உறவில் உங்கள் துணையின் உணர்வுகளை புறக்கணிப்பதைத் தவிர்க்கவும். ஆரோக்கியம் தொடர்பான விஷயங்களிலும், உடல் நலனிலும் கவனம் செலுத்தவும். உணவில் கட்டுப்பாடும், சோம்பலைத் தவிர்ப்பதும் அவசியம்.

**வணங்க வேண்டியதெய்வம்: திங்கள்கிழமை சிவன் வழிபாடு உங்களுக்கு நன்மையை செய்யும்.**

**ஸ்லோகம்: துக்க நிவார அஷ்ட்டகம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் துர்க்கை அம்மனுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: தை மாதம் 10-ம் தேதி 23/01/2025 வியாழக்கிழமை இரவு மணி 9.59 முதல் தை மாதம் 13ம் தேதி 26/01/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.55 மணி வரை**

---






ரிஷப இராசிக்காரர்கள் சரியான திட்டமிடலுடனும், பொறுமையுடனும் இருப்பது அவசியம். கடினமான காலகட்டங்களைச் சமாளிக்கும் வகையில் ஒழுக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும், சரியான முடிவை எடுத்தால் வெற்றி வாகை சூடுவீர்கள். கடந்த காலங்களில் செய் தவறுகளில் இருந்து பாடத்தைக் கற்றுக் கொள்வீர்கள். உங்களுக்கென உள்ள தனித் திறமையையும், தனித்துவத்தையும் கடைப்பிடிப்பது அனுகூலத்தை உண்டாக்கும்.தொழில், வியாபாரத்தில் ஏற்ற, இறக்கங்களை சந்திக்க நேரிடும். மாதத்தின் இரண்டாவது வாரத்தில் திடீரென பெரிய செலவை சந்திக்க நேரிடும். குடும்ப உறுப்பினர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படும். அனுசரித்து செல்வது அவசியம். கடினமான சூழ்நிலையில் புத்திசாலித்தனமான செயல்பாட்டால் வெற்றியடைவீர்கள். காதலில் உங்கள் துணை வாழ்க்கையில் அதிகமாக தலையிடுவதை தவிர்க்கவும். ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்தவும்.

**வணங்க வேண்டியதெய்வம்: துர்க்கை அம்மன் வழிபாடு நல்லது. உங்களுக்கு தைரியத்தை கொடுக்கும்.**

**ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டோத்தரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம் : செவ்வாய்க் கிழமை தோறும் துர்க்கை அம்மனுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம் : தை மாதம் 13ம் தேதி 26/01/2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.56 மணி முதல் தை மாதம் 15ம் தேதி 28/01/2025 செவ்வாய்க்கிழமை மாலை மணி 3.26 வரை**

---




இந்தப் புத்தாண்டு மிதுன ராசிக்காரர்களுக்கு செழிப்பான ஆண்டாக இருக்கும். இருப்பினும், அனைத்து செயல்களிலும் கவனத்துடன் இருப்பதும் அவசியம். உங்களுடைய இலக்கை அடைய சரியான திட்டமிடலும், விழிப்புணர்வும் மிகவும் அவசியம். பண வரவு உண்டாகும். பணத்தை சரியாக சுப விரயமாக செய்வது நல்லது. தொழில், பணி, கல்வி சார்ந்த புதிய விஷயங்களைக் கற்றுக் கொள்வது நல்லது. அறிவுப்பூர்வமான விஷயங்களில் கவனம் செலுத்துவதால் ஆதாயம் உண்டாகும். உங்களுடைய இலக்குகளை அடைய இவை உதவியாக இருக்கும்.



**வணங்க வேண்டியதெய்வம்: தினமும் குலதெய்வத்தை வழிபாடு செய்யுங்கள் நல்லது. உங்களுக்கு தைரியத்தை கொடுக்கும்.**

**ஸ்லோகம்: பைரவர் அஷ்டோத்தரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக்கிழமை தோறும் பைரவருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்ட்டமம் : தை மாதம் 15ம் தேதி 28/01/2025 செவ்வாய்க்கிழமை மாலை மணி 3.27 முதல் தை மாதம் 17ம் தேதி 30/01/2025 வியாழக்கிழமை காலை 8.37 மணி வரை**

---






உங்களின் நேரத்தையும், ஆற்றலையும் சரியாக பயன்படுத்தினால் எல்லாவிதத்திலும் சிறப்பான பலனை எதிர்பார்க்கலாம். முதலீடு செய்யும் முன் நிபுணர்களின் ஆலோசனை பெறுவது நன்று. வெளிநாடு, வெளிநாடு தொடர்பான வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்குச் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் செயலுக்கு குடும்ப உறுப்பினர்களின் மூலம் ஆதரவைப் பெறலாம். பணியிடத்தில் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் காதலை வெளிப்படுத்த நினைப்பவர்களுக்கு சாதகமான சூழல் அமையும். வாழ்க்கைத் துணையுடன் மகிழ்ச்சியாக பயணம் செல்ல வாய்ப்புள்ளது.சில பெரிய செலவுகள் சந்திக்க நேரிடும். அதனால் வரவுக்கு ஏற்ற செலவு செய்ய சரியாக திட்டமிடுங்கள். வியாபாரத்தில் ஏற்றத்தாழ்வுகளைச் சந்திக்க நேரிடும். கூட்டுத்தொழில் செய்யக் கூடியவர்களுக்கு பங்குதாரருடன் முக்கிய விஷயங்களை தெளிவு படுத்தவும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் உணர்ச்சிவசப்பட்டு எந்த முடிவையும் எடுக்காமல் இருப்பது நல்லது.

**வணங்க வேண்டிய தெய்வம்: தினமும் அம்பாளை வழிபாடு செய்யுங்கள்நல்லது.**

**ஸ்லோகம்: லெஷ்மி அஷ்டோத்தரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் லெஷ்மி குபேர விளக்கு ஏற்ற வேண்டும்.**

**கடக இராசி சந்திராஷ்ட்டம் தினம்: மார்கழி மாதம் 19ம் தேதி 03/01/2025 வெள்ளிக்கிழமை பகல் 12.34 மணி முதல் மார்கழி மாதம் 21ம் தேதி 05/01/2025 ஞாயிற்றுக் கிழமை மாலை மணி 3.50 வரை, தை மாதம் 17ம் தேதி 30/01/2025 வியாழக்கிழமை இரவு 8.38 மணிமுதல் தை மாதம் 19ம் தேதி 01/02/2025 சனிக் கிழமை இரவு மணி 12.01 வரை**




சிம்ம இராசி எந்த விஷயத்திலும் உறுதியுடன் செயல்பட்டால் சிரமங்கள் நீங்கும். வேலை தொடர்பான சவால்கள் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் இருக்கக்கூடிய பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் பொறுமையுடனும், புரிந்துணர்வுடனும் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி பெறலாம். வியாபாரத்தில் கடினமாக நினைத்த விஷயங்கள் சிறப்பாக செய்து முடிக்க முடியும். மாதத்தின் இரண்டாவது வாரத்தில் சில முக்கிய நபர்களை சந்திப்பால் சில புதிய வாய்ப்புகளை பெறுவீர்கள். குழந்தைகள் விஷயத்தில் சில நல்ல செய்திகளை கேட்கலாம். நீதிமன்றம் தொடர்பான எந்த ஒரு விஷயத்திலும் முடிவு உங்களுக்கு சாதகமாக வரும். மற்றவர்களிடம் சிக்கி உள்ள உங்களின் பணம் கைக்கு வந்து சேரும். காதல் உறவுகள் வலுப்படுத்த சூழல் சாதகமாக இருக்கும். திருமண வாழ்க்கையில் நல்லிணக்கத்தை பராமரிக்கவும். ஆரோக்கியம் சாதகமாக இருக்கும்.



**வணங்க வேண்டியதெய்வம்: தினமும் அன்னபூரணியை வழிபாடு செய்யுங்கள்.**

**ஸ்லோகம்: அன்ன பூரணி அஷ்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: வெள்ளிக் கிழமை தோறும் அன்னபூரணிக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: மார்கழி 21-ம் தேதி 05/01/2025 ஞாயிற்றுக்கிழமை மாலை மணி 3.51 முதல் 23-ம் தேதி 07/01/2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணி வரை, தை 19ம் தேதி 01/02/2025 சனிக்கிழமை இரவு மணி 12.02 முதல் 21ம் தேதி 03/02/2025 திங்கள்கிழமை இரவு 2.31 மணி வரை.**

---






கன்னி ராசிக்காரர்கள் செய்யும் செயல்களில் உறுதியுடன் இருப்பது நல்லது. வேலையில் அடுத்தகட்டமாக முன்னேறுவது நல்லது. கடந்த காலங்களில் மிகவும் சோர்ந்து போய் காணப்பட்ட நீங்கள் மிகவும் வலிமையாக உணர்வீர்கள். இந்த மாதத்தில் செல்வம், கவுரவம் மற்றும் உறவை வலுப்படுத்தக் கூடிய சாதகமான காலமாக இருக்கும். குடும்ப பிரச்சினைகள் நீங்கி நிம்மதி பெருமூச்சு விடுவீர்கள். பூர்வீக சொத்துக்களால் மகிழ்ச்சி அடைவீர்கள். வேலையிலும், தனிப்பட்ட வாழ்க்கையிலும் நண்பர்களின் முழு ஆதரவை பெறுவீர்கள். உங்கள் வேலையில் பதவி உயர்வுடன், பணியின் நோக்கமும் கூடும்.

**வணங்க வேண்டியதெய்வம்: தினமும் பிள்ளையாரை கும்பிடுங்கள். நல்லது நடக்கும்**

**ஸ்லோகம் : கணபதி அஷ்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் விநாயகருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டட்டம் தினம்: மார்கழி 23-ம் தேதி 07/01/2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.16 மணி முதல் 25ம் தேதி 09/01/2025 வியாழக்கிழமை இரவு மணி 8.04 வரை, தை 21ம் தேதி 03/02/2025 திங்கள்கிழமை இரவு 2.3 2 மணி முதல் 24ம் தேதி 06/02/2025 வியாழக்கிழமை காலை மணி 4.57 வரை**

---




துலாம் இராசியை சேர்ந்தவர்களுக்கு ஜனவரி மாதத்தில் வேலை தேடுபவர்களுக்கு எதிர்பார்த்த வகையில் நல்ல வாய்ப்புகள் அமையும். போட்டித் தேர்வு, விளையாட்டு போட்டிகளில் ஈடுபடுபவர்களுக்கு மிகவும் சாதகமான பலன்கள் கிடைக்கும். நிதி சார்ந்த நன்மைகள் கிடைக்கும். இந்த மாதத்தில் முதலீடு செய்யும் விஷயத்தில் கவனம் தேவை. குறுகிய கால லாபத்திற்கு ஆசைப்பட்டு எதிலும் பணம் முதலீடு செய்ய வேண்டாம். காதல் வாழ்க்கை தொடர்பாக சாதகமான சூழலில் நிலவும். பெண்கள் பணியிடத்திலும், குடும்பத்திலும் சமநிலையைப் பராமரிப்பது கடினமாக இருக்கும். தொடக்கத்தில் நிதி விஷயங்களில் கவனம் தேவை. நிதி தொடர்பான எந்த ஒரு முடிவை எடுக்கும்போது உங்களின் நலம் விரும்புகிறேன் ஆலோசனை பெற்றுக் கொள்ளவும். உங்கள் வேலையில் வெற்றி பெற மற்றவர்களை எதிர்பார்ப்பது நிறுத்திவிட்டு கடின உழைப்பை போடவும்.இந்த மாதத்தில் வேலை செய்பவர்களுக்கு பணிச்சுமை அதிகமாக இருக்காது.



**வணங்க வேண்டிய தெய்வம்: தினம்தோறும் முருகர் வழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும்.**

**ஸ்லோகம்: கணபதி அஷ்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் விநாயகருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: மார்கழி 25ம் தேதி 09/01/2025 வியாழக்கிழமை இரவு மணி 8.47 முதல் 27ம் தேதி 11/01/2025 சனிக்கிழமை இரவு 12.12 மணி வரை**

---






உங்கள் எண்ணங்களில் தோன்றும் நல்ல காரியங்களை செய்வது நல்லது. புதிய அனுபவங்கள் கிடைக்கும். செய்யும் செயல்களில் ஆர்வத்துடன் செயல்பட்டு பல்வேறு பெரிய பெரிய விஷயங்களை சாதிக்கக்கூடிய ஆண்டாக புத்தாண்டு இருக்கும். உங்களுடைய அறிவாற்றல் உங்களுக்கு தக்கசமயத்தில் கைகொடுக்கும்.

ஏற்றத்தாழ்வுகள் நிறைந்ததாக இருக்கும். சில நேரங்களில் உங்கள் வாழ்க்கையில் அதிக பண வரத்தும், சில நேரத்தில் அதிக செலவும் வந்து மனக்கஷ்டத்தை தரக்கூடியதாக இருக்கும். அதனால் இந்த மாதத்தில் தேவையற்ற செலவுகள் தவிர்ப்பது அவசியம். சேமிப்பை வலுப்படுத்தவும்.

**வணங்க வேண்டிய தெய்வம்: தினம்தோறும் ஆஞ்சனேயரை வழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும். நல்லது நடக்கும்.**

**ஸ்லோகம்: அஞ்சநேயர் அஷ்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் ஆஞ்சநேயருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: மார்கழி 27-ம் தேதி 11/01/2025 சனிக்கிழமை இரவு 12.13 மணி முதல் தை 1-ம் தேதி 14/01/2025 செவ்வாய்க்கிழமை அதிகாலை மணி 5.21 வரை**






இலக்குகளை நிர்ணயித்து அதை நோக்கிச் செயல்படுவது நல்லது. எடுத்த காரியங்களை ஆர்வத்துடனும், செயல்களை செய்து முடிப்பதில் உந்துதலுடனும் இருப்பீர்கள். எந்த விஷயங்களைச் செய்தாலும் பொறுமையுடன் செயல்படுவது நல்லது. நேரத்தையும், பணத்தையும் நிர்வகிக்க வேண்டிய மாதமாக இருக்கும்.

இந்த மாதம் உங்களுக்கு அதிக வேலைப்பளு ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய புத்திசாலித்தனமும் பணத்தை செலவிடவும் வேண்டியது இருக்கும். அலுவ லகத்தில் உங்களை இலக்கை அடைய கடினமாக உழைக்க வேண்டியதிருக்கும்.


**வணங்க வேண்டிய தெய்வம்: தினம்தோறும் குருவை வழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும் நல்லது நடக்கும்.**

**ஸ்லோகம் : குரு அஷ்ட்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம் :ஞாயிற்றுக் கிழமை தோறும் தக்ஷிணாமூர்த்திக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**தனுசு இராசி சந்திராஷ்ட்டம் தினம்: தை மாதம் 1ம் தேதி 14/01/2025 செவ்வாய் கிழமை அதிகாலை மணி 5.22 முதல் தை மாதம் 3ம் தேதி 16/01/2025 வியாழக்கிழமை பகல் 12.58 மணி வரை**

---






புத்தாண்டில் மகர ராசிக்காரர்களுக்கு ஏழரைச் சனி முடிகிறது. இந்த மாதத்தில் உங்களுடைய பொறுப்புகள் அதிகரிக்கும். கடந்த காலங்களில் செய்த தவறுகள் மற்றும் இழந்தவற்றை நினைவில் வைத்து, செயல்படுவது அனுகூலத்தை உண்டாக்கும். இதனால், எதிர்காலத்தில் உங்களுக்கு ஒளிமயமான வாழ்க்கை கைவசமாகும். சில சவால்களை காண்பிக்க வேண்டியதாக இருக்கும்.

பணியிடத்தில் கூடுதல் பணி சுமை ஏற்படும். இலக்கை அடைய கூடுதல் கடின உழைப்பையும், முயற்சியையும் செலுத்த வேண்டியிருக்கும். வேலையில் வெற்றி அடைய தடைகளுக்கு பயப்படாமல் தைரியத்துடன் எதிர்கொள்ளுங்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்: தினம்தோறும் சனீஸ்வரரை வழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும். நல்லது நடக்கும்.**

**ஸ்லோகம்: பைரவர் அஷ்ட்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் சனிஸ்வரகுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்ட்டமம்: தை மாதம் 3ம் தேதி 16/01/2025 வியாழக் கிழமை பகல் மணி 12.59 முதல் தை மாதம் 5ம் தேதி 18/01/2025 சனிக்கிழமை இரவு 10.57 மணி வரை**

---






கும்ப இராசியினருக்கு பல்வேறு துன்பங்களை கொடுத்து வந்த ஜென்ம சனி முடிகிறது. இதுவரை நிலவி வந்த அனைத்து பிரச்னைகளும் உங்களை விட்டு விலகும் என்றாலும், வேலைகளில் கவனமாக செயல்படுவது நல்லது. புதிய வியாபாரம், தொழில், முதலீடு விஷயங்களில் கவனமாக இருக்க வேண்டாம். உங்களுடைய இலக்கை நிர்ணயித்து அதற்கேற்ற வகையில் செல்வது அனுகூலம் தரும். பெரியவர்கள் அல்லது செல்வாக்கு மிக்க நபர்களின் உதவியால் நல்ல வேலை வாய்ப்பு கிடைக்கும். இதன் மூலம் முழு உற்சாகத்துடன் உங்கள் இலக்கை அடைய முயற்சி செய்வீர்கள். உங்கள் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்தவும்.இந்த மாதத்தில் உணர்ச்சி வசப்படாமல், எந்த ஒரு வேலையையும் சரியாக திட்டமிட்டு செய்வது அவசியம்.சொத்து தொடர்பான சில சர்ச்சைகளை சந்திக்க நேரிடும். அது தொடர்பாக முடிவு எடுப்பதில் குழப்பம் ஏற்படும். உங்கள் வாழ்க்கை துணை, அல்லது காதலிக்கு பரிசுப் பொருட்களை வழங்க நினைப்பீர்கள்.

**வணங்க வேண்டிய தெய்வம்: பைரவரைவழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும். நல்லது நடக்கும்.**

**ஸ்லோகம்: பைரவர் அஷ்ட்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் பைரவருக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்டமம்: தை மாதம் 5ம் தேதி 18/01/2025 சனிக்கிழமை இரவு 10.58 மணி முதல் தை மாதம் 8ம் தேதி 21/01/2025 செவ்வாய்க் கிழமை காலை மணி 10.28 வரை**

---






மீன இராசிக்காரர்களுக்கு ஏழரை சனி தொடங்கவுள்ளது. உங்களுடைய திறமைகளை அறிந்து அதற்கேற்ப செயல்பட்டால் நீங்கள் நினைத்த காரியங்கள் கைகூடும். யோகா, தியானம் செய்வது நல்லது. மன அமைதி மற்றும் உடல்நலனி கவனம் செலுத்துவது நல்லது. எந்த வேலைகளைச் செய்தாலும் அதில் கடின உழைப்பைத் தர வேண்டியதாக இருக்கும்.

தொடக்கத்தில் வேலை சம்பந்தமான சில சவால்கள் மற்றும் குடும்ப பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். எந்த ஒரு சூழ்நிலையிலும் விவேகத்துடனும், பொறுமை யுடனும் செயல்படுவது அவசியம். வேலை செய்பவர்களுக்கு வேலைப்பளு இருக்கும். உங்கள் நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். சிலருக்கு வேலையில் இடம் மாறுதல் அல்லது புதிய பொறுப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது.

**வணங்க வேண்டிய தெய்வம்: தினம்தோறும் சிவனை வழிபாட்டால் பிரச்சனைகள் நீங்கும்.**

**ஸ்லோகம்: சிவ அஷ்ட்டோத்ரம் சொல்லுதல் (or) கேட்டல் நல்லது.**

**பரிகாரம்: ஞாயிற்றுக் கிழமை தோறும் சிவனுக்கு விளக்கு ஏற்ற வேண்டும்.**

**சந்திராஷ்ட்டமம்: தை மாதம் 8ம் தேதி 21/01/2025 செவ்வாய்க் கிழமை காலை மணி 10.29 முதல் தை மாதம் 10ம் தேதி 23/01/2025 வியாழக்கிழமை இரவு 9.58 மணி வரை**



# பாரதியாக இருப்பதைவிட செல்லம்மாளாக இருப்பது..



இன்று பாரதியைப் பற்றி பலரும் பலவிதமாக விமர்சனம் செய்கிறார்கள்.

பாரதியின் மனைவி செய்த விமர்சனம் இதோ!

1951-ம் ஆண்டு திருச்சி வானொலியில் 'என் கணவர்' என்ற தலைப்பில் திருமதி செல்லம்மாள் பாரதி ஆற்றிய உரை.

"ஊருக்குப் பெருமை என் வாழ்வு. வையகத்தார் கொண்டாட வாழ வேண்டும் என்ற என் கனவு ஓரளவு பலித்த தென்னவோ உண்மைதான். இன்று என் கணவரின் புகழ் விண்முட்டிச் செல்கிறது.

இன்று மகாகவியின் மனைவியாக போற்றப்படும் நான், அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன்.

விநோதங்கள் என் வாழ்க்கையில் அதிகம். உலகத்தோடு ஒட்டி வாழ வகை அறியாத கணவருடன் அமர வாழ்வு வாழ்ந்தேன் என்றால் உங்களுக்கு சிரிப்பாகத்தான் இருக்கும்.

யாருக்கு மனைவியாக வாழ்ந்தாலும் வாய்க்கலாம், ஆனால் கவிஞன் மனைவியாய் இருப்பது கஷ்டம்.

கவிஞர்கள் போக்கே தனி. உண்பதிலும், உறங்குவதிலும் கூட சாதாரண மனிதரைப்போல் அவர்கள் இருப்பதில்லை.

கற்பனைச் சிறகு விரித்துக் கவிதை வானில் வட்டமிடும் பறவை, பூலோகத்திலே இருண்ட வீட்டிலே மனைவிக்கும் மற்றவருக்கும் சம்பாத்தியம் செய்துபோட்டு, சாதாரண வாழ்க்கை வாழ முடியுமா?

வறுமை, கவிஞனின் தனி உடைமை.

கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை; ஆனால் வயிற்றுக்குணவு தேடி வாழும் வகையை அவன் மனைவிதான் கண்டுபிடிக்க வேண்டி வருகிறது.

காதல் ராணியாக மனைவியைப் போற்றும் கவிஞன் அவளுக்கு சாதமும் போடவேண்டும் என்ற நினைவேயின்றிகாலம் கழித்தானே யானால், என்ன செய்ய முடியும்?

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன்; அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால் கவலை நிறைந்த வாழ்நாளைக் கழிக்க வேண்டும் என்று எந்தப் பெண்தான் நினைக்க முடியும்?

சிறு வயதில் ஆசாபாசங்களும், அபிலாஷைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் நிறைந்திருப்பது இயற்கைதானே?

சுகமாக வாழுவதற்கு சொர்க்கலோகம் சென்றால்தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது.

அந்த நாளிலிருந்த சத்திமுத்தப் புலவரின் மனைவியிட மிருந்து இன்று என்வரை சுகவாழ்வு ஒரே விதமாகத்தான் அமைந்திருக்கிறது.

ஏகாந்தத்தில் அமர்ந்துவிட்டால் முனிவரும்கூட அவரிடம் பிச்சைதான் வாங்கவேண்டும். ஆனால் மனைத் தலைவியாகிய நான் அவ்வாறு நிஷ்டையிலிருக்க முடியுமா?

கவிஞர்களில் பலதரப் பட்டவர்கள் இருக்கிறார்கள். கடவுளை பக்தி செய்யும் கவிஞன், காவியம் எழுதும் கவிஞன், இவர்களை புற உலகத் தொல்லைகளை சூழ இடமில்லை.

எனது கணவரோ கற்பனைக் கவியாக மட்டுமல்லாமல் தேசியக் கவியாகவும் விளங்கியவர். அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன்.

கவிதை வெள்ளத்தை அணை போட்டுத் தடுத்தது அடக்குமுறை. குடும்பமே தொல்லைக்குள்ளாகியது. ஆனால் நுங்கும் நுரையுமாகப் பொங்கிவரும் புது வெள்ளம் போல அடக்குமுறையை உடைத்துக் கொணடு பாய்ந்து செல்லும் அவர் கவிதை.

காலையில் எழுந்ததும் கண்விழித்து, மேநிலை மேல், மேலைச்சுடர் வானை நோக்கி வீற்றிருப்பார்.

ஸ்நானம் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விதத்தில் அமையும். சூரிய ஸ்நானம்தான் அவருக்குப் பிடித்தமானது. வெளியிலே நின்று நிமிர்ந்து சூரியனைப் பார்ப்பதுதான் வெய்யற் குளியல். சூரியகிரணம் கண்களில் உள்ள மாசுகளை நீக்கும் என்பது அவர் அபிப்பிராயம்.

காலைக் காப்பி, தோசை பிரதானமாயிருக்க வேண்டும் அவருக்கு. தயிர், நெய், புது ஊறுகாய் இவைகளைத் தோசையின் மேல் பெய்து தின்பார்.



அவருக்குப் பிரியமான பொருளைச் சேகரித்துக் கொடுத்தால், அரவது நண்பர்களான காக்கையும், குருவியும் அதில் முக்கால் பாகத்தைப் புசித்து விடுவார்கள். எதை வேண்டுமானாலும் பொறுக்க முடியும்; ஆனால் கொடுத்த உணவைத் தாம் உண்ணாமல் பறவைகளுக்குப் போட்டுவிட்டு நிற்கும் அவருடைய தார்மிக உணர்ச்சியை மட்டும் என்னால் சகிக்கவே முடிந்ததில்லை.

சிஷ்யருக்குக் குறைவு இராது. செய்திகளுக்கும் குறைச்சல் இல்லை. கானாமுதமோ காதின் வழியே புகுந்து உடல் எங்கும் நிறைந்துவிடும். களிப்பை மட்டும் பூரணமாக அனுபவிக்க முடியாமல் உள்ளிருந்து ஒன்று வாட்டும். அதுதான் கவலை!

இச்சகம் பேசி வாழும் உலகத்தில் எப்பொழுதும் மெய்யே பேச வேண்டும் என்பது அவரது கட்டளை. எக்காரணத்தைக் கொண்டும் பொய் பேசக் கூடாது.இது எத்தனை சிரமமான காரியம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தான்.

புதுவை எனக்குச் சிறைச்சாலை ஆகியது. சிறைச்சாலை என்ன செய்யும்? ஞானிகளை அது ஒன்றும் செய்ய முடியாதுதான். எதையும் ஏற்றுக்கொள்ளும் மனத்திண்மை அவர்களுக்கு உண்டு. ஆனால் என்னைப்போன்ற சாதாரணப் பெண்ணுக்கு, இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தை லட்சியமாகக் கொண்ட ஒருத்திக்கு சிறைச்சாலை நவநவமான துன்பங்களை அள்ளித்தான் கொடுத்தது. புதுவையில்தான் புதுமைகள் அதிகம் தோன்றின. புது முயற்சிகள், புதிய நாகரிகம், புதுமைப் பெண் எழுச்சி, புதுக் கவிதை இவை தோன்றின.

இத்தனை புதுமைகளும் எழுவதற்கு நான்தான் ஆராய்ச்சிப் பொருளாக அமைந்தேன்.

பெண்களுக்குச் சம அந்தஸ்து வழங்க வேண்டுமா, வேண்டாமா என்று வெகுகாலம் ஆராய்ந்த பின்னரே, பெண் விடுதலை அவசியம் என்ற முடிவுகண்டு, நடைமுறையில் நடத்துவதற்குத் துடிதுடித்தார் என் கணவர்.

இந்த முடிவை அவர் காண்பதற்குள் நான் பட்டபாடு சொல்லுந் தரமன்று.

புதுவையில் அரசியலில் கலந்துகொள்ள ஒரு வசதியும் இல்லாதிருந்த போதிலும், தமிழ் இலக்கியத் தொண்டு செய்ததனால் ஒருவாறு மன அமைதி பெற்றிருந்தார்.

நமது பொக்கிஷங்கள் என்று கருதத் தகும்படியான அவரது கவிதைகள் எல்லாம் அங்குதான் தோன்றின.

மனிதரை அமரராக்க வேண்டும் என்று தவித்த என் கணவர், எத்தனை இடையூறுகளும் எதிர்ப்புகளும் ஏற்பட்ட போதிலும், அவற்றை யெல்லாம் மோதிமிதித்து விட்டுத் தம் லட்சியத்தில் முன்னேறும் துணிவு கொண்டு செயலாற்றினார். மகாகவி நாட்டிற்காக, அதன் சுதந்திரத்திற்காக வாழ்ந்தார். தமிழ் பண்பாட்டில் சிறந்த அவர் ஈகை, அன்பு, சகிப்புத்தன்மை முதலான பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்ந்தது ஓர் அதிசயமன்று.

தூங்கிக் கிடந்த தமிழரை விழிப் புறுத்தியதும் அதிசயமன்று; ஆனால் இன்று அவரது பூத உடல் மறைந்த பின்பும் தமிழ் பேசும் ஒவ்வோர் உயிரினிடத்தும் அவர் கலந்து நிற்பதுதான் அதிசயம் என்று எனக்குத் தோன்றுகிறது. விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! என்று அவரது கவிதை மொழியில்தான் இந்த மகிழ்ச்சியைத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

தேசியகவியின் மனைவியின் தரம், தெளிவுபட உரைக்கும் சொல் வன்மை அன்னையை மனதார வியக்க செய்கிறார்.

பாரதியின் செல்லம்மாள்..!

வாழ்வியலும் உடல் நலமும்

# புற்றுநோய் தோற்கடிக்கப்பட்டது

# அன்னாசி சூடான தண்ணீர்



*இந்தப் புல்லட்டினைப் பெற்ற ஒவ்வொருவரும் பத்துப் பிரதிகளை மற்றவர்களுக்கு விநியோகம் செய்தால், ஒரு உயிராவது காப்பாற்றப்படும் என்று ஐசிபிஎஸ் பொது மருத்துவமனை பேராசிரியர் டாக்டர். கில்பர்ட் ஏ.குவாக் கூறினார்.*

*நான் என் பங்கில் சிலவற்றைச் செய்துள்ளேன், உங்களாலும் முடியும் என்று நம்புகிறேன்.*

நன்றி!


அன்னாசி சுடுநீர் உங்கள் உயிரைக் காப்பாற்றும். சூடான அன்னாசி புற்றுநோய் செல்களை அழிக்கிறது. ஒரு கப் வெந்நீரில் 2 முதல் 3 நறுக்கிய அன்னாசிப்பழம் சேர்த்து தினமும் குடித்து வந்தால் அனைவருக்கும் நல்லது. 'கார நீர்'.

சூடான அன்னாசி புற்றுநோய் எதிர்ப்பு பொருட்களை வெளியிடுகிறது, இது பயனுள்ள புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவத்தில் சமீபத்திய முன்னேற்றம். சூடான அன்னாசிப் பழத்திற்கு நீர்க்கட்டிகள் மற்றும் கட்டிகளை அகற்றும் திறன் உள்ளது. இது அனைத்து வகையான புற்றுநோய்களுக்கும் சிகிச்சையளிப்பதாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

அன்னாசிப்பழ வெந்நீர் ஒவ்வாமை / அலர்ஜி காரணமாக உடலில் உள்ள அனைத்து கிருமிகளையும் நச்சுகளையும் நீக்குகிறது. அன்னாசி பழச்சாற்றில் இருந்து பெறப்படும் மருந்து, வீரியம் மிக்க செல்களை கொன்று ஆரோக்கியமான செல்களை பாதிக்காது.

மேலும், அன்னாசி பழச்சாற்றில் உள்ள அமினோ அமிலங்கள் மற்றும் அன்னாசிப் பாலிஃபீனால்கள் உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், உள் இரத்த நாளங்களில் அடைப்பைத் தடுக்கும், இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும் மற்றும் இரத்த உறைதலைக் குறைக்கும்.

**செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:**
**editorpoliceparvai@gmail.com**
**செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438**



# குந்தாணி

இன்றைய தலைமுறையினருக்கு குந்தாணி என்பது ஓர் வசவுச் சொல்லாக மட்டுமே தெரியும்!

உண்மையாகவே உலக்கை கொண்டு உரலை குத்தும் (இடிக்கும்) பொழுது நெல் மணிகள் வெளியே சிதறாமல் பாதுகாக்கும் வாயகன்ற – புடைப்பான அமைப்புக்கு குந்தாணி என்று பெயர்.

மேல்பகுதியில் வாய் அகன்றும் கீழ்பகுதியில் உரலுடன் பொருந்துமாறு ஒடுங்கி – புடைப்பான வளையம் போன்ற வடிவத்தில் உரலைச் சுற்றி ஒரு தடுப்பைப் போல பயன்படுகிறது குந்தாணி.

முற்காலத்தில் உரல்கள், குந்தாணி ஆகியவை கருங்கற்களால் செய்யப்பட்டது. உலக்கைகள் மரத்தால் செய்யப்பட்டு இரு முனைகளிலும் பூண் போடப்பட்டிருக்கும். (உலக்கைப் பூண் என்பது மரத்துக்கு போடப்படும் இரும்புக் கவசம்) .

பிற்காலத்தில் வேம்பு, பாலை போன்ற மரத்தில் செய்யப்பட்ட உரல்களும் வழக்கில் இருந்தன.

பெண்ணுக்கு இடை பெருத்திருந்தால் – ‘குதிர் போல இருக்கிறாள், குந்தாணி போல் இருக்கிறாள்’ என்று முட்டாள்தனமாக கேலி செய்வது வழக்கமாம். கொஞ்சம் குண்டாக இருக்கும் பெண்களையும் குந்தாணி என்றும் அழைத்தனர்.

இதில் குத்திய அரிசி போட்டு மாவும் இடிப்பார்கள். இதனுடன் பனங்கருப்பட்டி நன்கு காய்ச்சிய பாகு பதத்தில் சேர்த்து அரிசி மாவுடன் செய்வதே பச்சைமாவு. நன்றாக வறுத்த எள், பனங்கருப்பட்டி கொண்டு உரலில் இடித்தால் பத்து வீடு தள்ளி மணக்கும்முங்க, கோயில் விழாக்கள் பண்டிகைகள் என்றால் அன்றைய கிராமத்து வீடுகளில் விடிய, விடிய உரலில் நெல் அரிசி குத்தும் வேலை அதிகம் இருக்கும். இன்றும் புதிய வீடுகள் கட்டுபவர்கள் அம்மி ஆட்டுக்கல் உரல் அனைத்தும் வைக்கிறாங்க.வீட்டுக்கு வெளியில் ஒருகாலத்தில் மழைமாணி இது தானுங்க.

உரல் அளவு மழை நீர் நிரம்பினால் ஓர் உழவு இரண்டு உழவு என்றும் அரை உரல் நிரம்பினால் அரை உழவு மழை என்றும் கணிப்பார்கள் ஊர் பெருசுகள்.

கிராமத்தில் ஒரு பழமொழி இருக்குமுங்க முறை பெண்களை இப்படித்தானுங்க சொல்லுவோம்.

மாமன் புள்ளை மந்தாணி; அத்தை புள்ளை குந்தாணி.. அந்த காலத்தில் பிரபலமாக இருந்த உரலும் குந்தாணியும் உலக்கையும் இப்போது எங்கே என்று தேட வேண்டிய சூழ்நிலையில் உள்ளது இன்றைய காலகட்டம்.



# 2024-ல் மத்திய மண்டல மாவட்டங்களில் போதை பழக்கங்களுக்கு எதிராக 27,315 விழிப்புணர்வு கூட்டங்கள்: IG G.கார்த்திக்கேயன் IPS தகவல்

2024 ஆம் ஆண்டில் 27,315 "போதை பழக்கங்களுக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டங்கள்" நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என திருச்சி மத்திய மண்டல ஐ.ஜி கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருச்சி மத்திய மண்டல IG G.கார்த்திகேயன் IPS இன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளதாவது;


திருச்சி மத்திய மண்டல IG G.கார்த்திகேயன் IPS

தமிழக முதல்வரின் ஆணைகிணங்க போதை இல்லா மாவட்டத்தை உருவாக்கும் முயற்சியாகவும், போதை பழக்கத்தை முற்றிலும் தடுக்கும் வண்ணமும், பொது இடங்களிலும், கல்லூரி மற்றும் பள்ளிகளில் கஞ்சா மற்றும் புகையிலை, குட்கா போதைபொருட்கள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீமைகள் பற்றிய விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர், மாவட்ட கல்வி அலுவலர், அனைத்து கல்லூரி மற்றும் பள்ளி முதல்வர்கள், தலைமையாசிரியர் மற்றும் சமூக ஆர்வலர்களுடன் இணைந்து மத்திய மண்டல காவல்துறை சார்பில் 2023 ஆண்டை (13,622) விட 2 மடங்கு கூடுதலாக, 2024 ஆம் ஆண்டில் 27,315 "போதை பழக்கங்களுக்கு எதிரான விழிப்புணர்வு கூட்டங்கள்" நடத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அனைத்து மாவட்டங்களிலும் காவல்துறை மற்றும் பல்வேறு பொதுநல அமைப்பினருடன் இணைந்து விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மத்திய மண்டல மாவட்டங்களில் கஞ்சா மற்றும் தடைசெய்யப்பட்ட போதை பொருட்கள் விற்பனை செய்த நபர்கள் மீது 2023 ஆம் ஆண்டில் 861 வழக்குகள் பதிவுசெய்யப்பட்டு, 1236 நபர்கள் கைது செய்யபட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், 2024 ஆம் ஆண்டில் மத்திய மண்டல காவல் மாவட்டங்களில் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் சீரிய பணியால் மத்திய மண்டலத்தில் மொத்தம் 1207 வழக்குகள் (திருச்சி-103, புதுக்கோட்டை-122, கரூர்-142, பெரம்பலூர்-68, அரியலூர்-38, தஞ்சாவூர்-235, திருவாரூர்-204, நாகப்பட்டினம்-56 மற்றும் மயிலாடுதுறை-239) பதிவு செய்யப்பட்டு, மொத்தம் 1662 நபர்கள் கைது செய்யப்பட்டு (திருச்சி-181, புதுக்கோட்டை-201, கரூர்-191, பெரம்பலூர்-101, அரியலூர்-44, தஞ்சாவூர்-357, திருவாரூர்-253, நாகப்பட்டினம்-87 மற்றும் மயிலாடுதுறை-247) நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களிடமிருந்து 2,558 கிலோ அளவில் கஞ்சா (திருச்சி-78, புதுக்கோட்டை- 459, கரூர்-30, பெரம்பலூர்-146, அரியலூர்-7, தஞ்சாவூர்-1024, திருவாரூர்-65, நாகப்பட்டினம்- 717 மற்றும் மயிலாடுதுறை-32) மற்றும் போதை பொருட்களான Tapendadtol Tablets, Diazepam Powder & Injections ஆகியவைகள் 5 கிலோ அளவில் கைப்பற்றப்பட்டு நீதிமன்ற ஆணையின்படி அழிக்கப்பட உள்ளது. மேலும் குற்றவாளிகளிடமிருந்து 139 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

தொடர்ந்து கஞ்சா, தடைசெய்யப்பட்ட போதை பொருட்கள் மற்றும் குட்கா போன்ற பொருட்களை விற்பனை மற்றும் கடத்தல் செய்த 57 நபர்களை (திருச்சி-5, புதுக்கோட்டை-1, கரூர்-1, பெரம்பலூர்-14, அரியலூர்-2, தஞ்சாவூர்-17, திருவாரூர்-12, நாகப்பட்டினம்-2 மற்றும் மயிலாடுதுறை-3) குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேபோல் தடைசெய்யப்பட்ட குட்கா பொருட்கள் விற்பனை செய்த நபர்கள் மீது 2024 ஆம் ஆண்டில் 4226 வழக்குகள் (திருச்சி-391, புதுக்கோட்டை-524, கரூர்-392, பெரம்பலூர்- 314, அரியலூர்-335, தஞ்சாவூர்-891, திருவாரூர்-835, நாகப்பட்டினம்-170 மற்றும் மயிலாடுதுறை-374) பதிவு செய்யப்பட்டு4380 நபர்கள் கைது செய்யப்பட்டு (திருச்சி-442, புதுக்கோட்டை-546, கரூர்-411, பெரம்பலூர்-316, அரியலூர்-342, தஞ்சாவூர்-919, திருவாரூர்- 848, நாகப்பட்டினம்-177 மற்றும் மயிலாடுதுறை-379) நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், அவர்களிடமிருந்து 23,650 கிலோ அளவில் குட்கா பொருட்கள் (திருச்சி-2062, புதுக்கோட்டை -3281, கரூர்-1957, பெரம்பலூர்-824, அரியலூர்- 2738, தஞ்சாவூர்-8152, திருவாரூர்-1541, நாகப்பட்டினம்-2241 மற்றும் மயிலாடுதுறை-850) கைப்பற்றப்பட்டு நீதிமன்ற ஆணையின்படி அழிக்கப்படவுள்ளது. மேலும் குற்றவாளிகளிடமிருந்து 151 வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளது.

மத்திய மண்டலத்தில் உள்ள திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களில் சட்டம் ஒழுங்கை பேணிகாக்கவும், கஞ்சா போதை பொருட்கள், குட்கா பொருட்கள், விற்பனை மற்றும் கடத்தல் போன்றவைகளை முற்றிலுமாக ஒழிக்க வரும் காலங்களிலும் தக்க நடவடிக்கை எடுக்க மத்திய மண்டலத்துக்குட்பட்ட மாவட்டங்களில் பணிபுரியும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

தலைமை நிருபர்: மு.பாண்டியராஜன், திருச்சி





வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு சார்பில்

# வெள்ளானூரில் மாற்றுத்திறனாளிகள் தினம்

வில்லிவாக்கம் ஒன்றிய வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு மற்றும் வசந்தம் மாற்றுத்திறனாளிகள் மாவட்ட கூட்டமைப்பு இணைந்து நடத்திய சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் 28.12.2024 சனிக்கிழமை அன்று வெள்ளானூர் சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு வெள்ளானூர் ஊராட்சி மன்ற தலைவர் Dr.அ.பிரபாகரன் தலைமை வகித்தார். மேலும் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார் வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் ஒன்றிய தலைவர் மற்றும் போலீஸ் பார்வை இதழின் தலைமை ஆசிரியர் Dr.எஸ்.முருகானந்தம்(எ)நந்தா முன்னிலை வகித்தார்.

திமுக-வின் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் மோரை கோ.தயாளன், வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் மற்றும் அயப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் துரை வீரமணி, வெள்ளனூர் ஊராட்சி மன்ற தலைவர் Dr.அ.பிரபாகரன், மோரை ஊராட்சி மன்ற தலைவர் R.திவாகரன், T-7 காவல் ஆய்வாளர் C.தனம்மாள் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி, விழாவினை தொடங்கி வைத்தனர்.

வசந்தம் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பின் தலைவர் Dr.A.லிவிங்ஸ்டன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா சிறப்புரையாற்றினார். மோரை ஊராட்சி மன்ற தலைவர் R.திவாகரன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாற்று திறனாளி பள்ளி குழந்தைகளுக்கு ஜாமிட்ரி ஃபாக்ஸ் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு கதர் ஆடை அணிவித்து நினைவு பரிசு கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் எஸ்.சீனிவாசன், வெள்ளனூர் ஒன்றிய கவுன்சிலர் (திமுக)குணா தயாநிதி, தமிழக வெற்றிக் கழகத்தின் சென்னை,/ கிழக்கு மாவட்ட தலைவர் அம்பத்தூர் ஜி.பாலமுருகன் அயப்பாக்கம் யாமினி இளையராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். மேலும் 500க்கும் மேற்பட்ட மாற்றத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் பரிசு பொருட்கள் வழங்கப்பட்டது மற்றும் சிறப்பு அழைப்பாளர்களுக்கு ஒன்றியத்தின் சார்பாக விருதுகள் வழங்கி கௌரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது நிகழ்ச்சி ஏற்பாட்டின வில்லிவாக்கம் ஒன்றிய வசந்தம் மாற்றுத்திறனாளிகள் கூட்டமைப்பு நிர்வாகிகள் S.முருகானந்தம் (எ)நந்தா, S.இளம்பரிதி, A.செல்வி, N.சரஸ்வதி, T.துளசி.



பணியாளர்கள் R.சிவகாமி, சிங்கப்பெண் S லட்சுமி, R.ஜானகி, V.சத்யா, N.மீனாட்சி, A.ஜெரினா, P.நட்ராஜ் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் நிகழ்ச்சியில் முக்கிய பங்கு வகித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதன்மை ஆசிரியர்: Dr.S.முருகானந்தம்(எ)நந்தா

# நில மோசடி குற்றங்கள் தொடர்பான சட்டப் பிரிவுகள்

**நில மோசடி புகார்கள் / அது தொடர்பான குற்றங்கள் / அதற்குரிய இந்திய தண்டனை சட்டத்தின் (Indian Penal Code ) சட்டப்பிரிவுகள்.**

1. அடுத்தவர் சொத்தைதன்னுடையது என சொல்லி விற்றவருக்கு 7ஆண்டு  சிறைத் தண்டனை – U/S 419, 464, 471 IPC.

2. ஒருவர் உத்தரவு கொடுக்காமலே கொடுத்துவிட்டதாக ஆவணங்களை தயார் செய்து விற்றவருக்கு 7 ஆண்டு சிறைத் தண்டனை - U/S 419, 464, 471 IPC.

3. கடன் வாங்கித் தருவதாகக் கூறி, ஒருவனது அசல் நிலப் பத்திரத்தை வாங்கி தனது சொத்தென்று சொல்லி விற்றவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை – U/S 419, 464, 471 IPC.

4. ஒருவர் பிழைப்புக்காக சில வருடங்கள் வெளியூர் சென்றிருக்கையில் அவரது இடத்தை தனக்கு சொந்தமாக்கி விட்டவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை – U/S 403, 419, 464, 471 IPC.

5. ஒரு இடத்தை இரண்டு நபர்களிடம் விற்றவருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை – U/S 419, 464, 471 IPC.

6. ஒரே வீட்டில் அண்ணனது பத்திரத்தை திருடி, அவரது சொத்தை விற்ற தம்பிக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை – U/S 419, 464, 471 IPC.

7. தனது இடத்தில் வீடு கட்டுகையில் பக்கத்தில் உள்ள இன்னொருவனின் இடத்தில் சில அடி தூரங்களை ஆக்கிரமித்துக் கட்டுமானம் செய்தவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை – U/S 403, 441, 447 IPC.

8. தனது இடத்தை விற்ற போது, பக்கத்திலுள்ள இன்னொருவரின் நிலத்தையும் சேர்த்து விற்றவருக்கு 7 ஆண்டுகள் சிறை தண்டனை – U/S 403, 419, 464, 471 IPC.

9.எல்லைக் கல்லைப் பிடுங்கிவிட்டு அடுத்தவன் இடத்தை ஆக்கிரமிப்பு செய்தவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை – U/S 403, 441, 447, 489 IPC.

-**K.T.சிவக்குமார்** BA.,BL.
Cell: 94432 73773





Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**



எங்களிடம் கன்ஸ்ட்ரக்ஷன், வீடுகள், அடுக்குமாடி
குடியிருப்புகள் தரமான முறையில் கட்டி தரப்படும்.
டிரஸ் & பெப்பிரிக்கேசன் ஒர்க்ஸ்
சிறந்த முறையில் செய்து தரப்படும்.
எங்களிடம் ரப்பிஸ், மணல் கிடைக்கும்
JCB, டிப்பர்
வாடகைக்கு
கிடைக்கும்
அயான் கன்ஸ்ட்ரக்ஷன்
-:: தொடர்புக்கு ::-
Prop: S.அன்வர்தீன் ✆ 98424 75150
10, கான்மியான் பள்ளிவாசல் தெரு, பாலக்கரை, திருச்சி- 620 008.




இனிய
பொங்கல்
திருநாள்
நல்வாழ்த்துகள்!
ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்
போலீஸ் பார்வை மாத இதழ் குழுமம்

POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520, Date of publication Everymonth 1st week.
Postel Registration Number TN/TBM/187/2023-25 Posted between 8-14 Every Month. Posted at - patrikachannel Egmore




–::: தொடர்புக்கு :::–

**786 78 28 203, 638 298 5562**

4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO